316

1934

இயற்கை விளக்க வாசகம்

# மூன்றும் புத்தகம்

14 JUL 1934
MADRAS

திவான் பகதூர்
**வி. கிருஷ்ணமாச்சாரியார்**
அவர்கள் இயற்றியது.

கொழும்பு, சகிராக் கல்லூரித் தலைமைத் தமிழ்ப்பண்டிதர்
**திரு. மு. நல்லதம்பி** அவர்களால்
திருத்தியும் புதுக்கியும் அமைக்கப்பட்டது

மாக்மில்லன் அண்டு கம்பெனி, லிமிடெட்
சென்னை, பம்பாய், கல்கத்தா, லண்டன்

# இயற்கை விளக்க வாசகம்

---

# மூன்றும் புத்தகம்

OFFICE OF THE REGISTRAR
14 JUL 1937
MADRAS

திவான் பகதூர்

**வி. கிருஷ்ணமாச்சாரியார்**

அவர்கள் இயற்றியது.

கொழும்பு, சகிராக் கல்லூரித் தலைமைத் தமிழ்ப்பண்டிதர்

**திரு. மு. நல்லதம்பி** அவர்களால்

திருத்தியும் புதிக்கியும் அமைக்கப்பட்டது

1229
1261
474-8186

மாக்மில்லன் அண்டு கம்பெனி, லிமிடெட்

சென்னை, பம்பாய், கல்கத்தா, லண்டன்

1937

பதிவு செய்யப்பட்டது] [விலை 4 அணா.

*COPYRIGHT*

First Edition printed in 1919.
Reprinted 1923, 1924 (Twice), 1926, 1927, 1929, 1935.
Revised Edition 1937.

PRINTED AT
THE INTERNATIONAL PRINTING WORKS, G. T., MADRAS

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 JUL 1937
MADRAS

# முகவுரை.

திவான் பகதூர் வி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்களியற்றிய இயற்கை விளக்க வாசகங்களை இலங்கைக்குரிய முறையிற்றிருத்திப் புதுக்கித்தருமாறு, சென்னை, மாக்மில்லன் கம்பெனித் தலைவரவர்கள் கேட்டுக் கொண்டமைக்கியைந்து, பழைய பாடங்களுள் இருபத்தொன்றைத்தெரிந்து, மொழியழகும் பொருணிறைவு மமையுமாறு திருத்தியமைத்து, எனக்குரிமையான ஆறு பாடங்களை அவற்றோடு சேர்த்து இம்மூன்றும் புத்தகத்தை நிறைவு செய்துள்ளேன்.

கலைவளங்காண்பாரும், மொழிவளம் விழையும் தேர்வறிஞரும் நல்லாசிரியரும் இதன் நலங்கண்டு எனக்கு ஊக்க மளிப்பாராக.

மு. நல்லதம்பி.

## உள்ளுறை.


| பாடம். | விஷயம் | | | பக்கம். |
|---|---|---|---|---|
| 1. | தேயிலை | ... | ... | 1 |
| 2. | பறவைகள் | ... | ... | 2 |
| 3. | எருமை | ... | ... | 4 |
| 4. | கழுதை | ... | ... | 7 |
| 5. | ஒட்டகம் | ... | ... | 8 |
| 6. | கரடிக்குத் தப்பினவர்கள் | | ... | 11 |
| 7. | சோம்பேறி திருந்தியது | | (பாட்டு) | 14 |
| 8. | குதிரை | ... | ... | 19 |
| 9. | உப்பும் சருக்கரையும் | ... | ... | 22 |
| 10. | குரங்கு | ... | ... | 25 |
| 11. | எறும்புகளும் தத்துக்கிளியும் | | ... | 28 |
| 12. | பொய்சொல்லி உயிர் இழந்தது | | (பாட்டு) | 30 |
| 13. | காகமும் கிளியும் | ... | ... | 33 |
| 14. | மரம் | ... | ... | 36 |
| 15. | மரம் | | (தொடர்ச்சி) | 38 |
| 16. | பேராதனைத் தோட்டம் | ... | ... | 41 |
| 17. | கொக்கும் நரியும் | ... | ... | 43 |
| 18. | குறத்தியும் சிறுவனும் | ... | (பாட்டு) | 46 |
| 19. | மூட ஆமை | ... | ... | 48 |
| 20. | நமது உடம்பு | ... | ... | 51 |
| 21. | நீர் | ... | ... | 54 |
| 22. | பூனையும் புலியும் | ... | ... | 56 |
| 23. | பூனையும் புலியும் | | (தொடர்ச்சி) | 59 |
| 24. | புறாவும் எறும்பும் | ... | ... | 61 |
| 25. | உயிர்கள்மேல் இரக்கம் | | (பாட்டு) | 64 |
| 26. | கடவுள் | ... | ... | 67 |
| 27. | செய்யுட் பாடம் | ... | ... | 68 |

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 JUL 1937
MADRAS

தேயிலைத் தோட்டம்

*Photo by John & Co., Ceylon.*

# மூன்றும் புத்தகம்

## 1. தேயிலை

1. பிள்ளாய்! எங்களிலே பலர் அருந்தும் தேய் நீரில் இடப்படும் தேயிலை எங்கு உண்டாக்கப்படுகின்றது, என்று உனக்குத் தெரியுமா? நாம் வாழும் இலங்கையின் மலை நாடுகளிலே அது உண்டாக்கப்படுகிறது. உலகத்தில் உண்டாகும் தேயிலைகளில், இலங்கைத் தேயிலையே சிறந்தது.

2. பக்கத்தில் உள்ள படத்தைப்பார். அது ஒரு தேயிலைத் தோட்டத்தின் படம். பல பெண்களும், ஆண்களும், அந்தத் தோட்டத்தில் இடையிடையே நின்று தேயிலைக் கொழுந்து கிள்ளுகிறார்கள். மழையும், வெயிலும் தங்களைத் தாக்காதபடி அவர்கள் தலையை மூடிப் போர்வை இட்டிருக்கிறார்கள். தலையிலிருந்து பின்புறமாய் ஒரு கூடை தொங்குகிறது. கிள்ளும் தேயிலைக் கொழுந்தை, அவர்கள் அந்தக் கூடையிற் சேர்த்துக் கொள்வார்கள்.

3. இந்தக் கொழுந்துதான், நன்றாக வாட்டப்பட்டு, வகை வகையான இலைகளாகத் தெரியப்படுகிறது. தேயிலையிற் பலவகை இருப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இந்த இலைகள் ஈயத் தகடுகளில் அடைக்கப்பட்டு விற்பனைக்காக வேறு நாடுகளுக்குப் போக்கப்படுகிறது.

4. மாணவரே! நீங்கள் தேயிலைத் தோட்டத்தைப் பார்த்திருக்கிறீர்களா? பாராவிட்டால் விடு

தலே காலங்களில் உங்கள் ஆசிரியருடன் சென்று பார்த்து மகிழுங்கள்.

திரு. மு. ந.

அருஞ்சோல் :—தெரிதல், விற்பனே, போக்கல், மகிழல்.

1. நாம் அருந்துந் தேயிலே எப்படிக் கிடைக்கிறது ?
2. தேய் நீர் உண்டாக்குவதெப்படி ?

---

## 2. பறவைகள்

1. பறப்பவைகளேப் பறவைகள் என்கிருேம். அவைகளேப் பக்ஷிகள் என்றும் சொல்லலாம். பல பறவைகள் பார்வைக்கு அழகாய் இருக்கும். பறவைகளிற் பலவகை உண்டு.

2. கிளி, புரு, காகம் முதலிய பறவைகள் சிறியவை. வாத்து, வான்கோழி, மயில் முதலிய பறவைகள் பெரியவை. குயில் முதலிய சில பறவைகள் இனிமையாய்க் கூவும். ஆந்தை முதலிய சில பறவைகளின் குரல் வெறுப்பாய் இருக்கும்.

3. சில பறவைகளே மனிதர் வீட்டில் வைத்து வளர்க்கிருர்கள். அப்படிப்பட்ட பறவைகளில், கிளி மிகவும் பொதுவானது. கிளிக்கு நாம் பேசக் கற்றுக்கொடுத்தால் அது அப்படியே பேசும். 'சொன்னதைச் சொல்லுங் கிளிப்பிள்ளே'.

4. பறவைகளிற் சில, ஊன் தின்பவைகள். கழுகு, ஆந்தை முதலியவை இந்த இனத்தைச் சேர்ந்தவை. மற்றப் பறவைகளிற் சில, பூச்சி புழுக்களேயும், சில, பழங்களேயும் தானியங்களேயும் தின்னுகின்றன



5. பறவைகளால் நமக்கு மிகுந்த பயன் உண்டு. மரம் செடிகளையும், பயிர் பச்சைகளையும், அழிக்கிற பூச்சி புழுக்கள் எவ்வளவோ இருக்கின்றன. அந்தப் பூச்சி புழுக்களைப் பறவைகள் தின்று ஒழித்துவிடுகின்றன. அதனாற் பயிர்வகைகள் அழியாமற் காக்கப்படுகின்றன.

6. காக்கை முதலிய சில பறவைகள், செத்துப்போன எலி முதலிய பிராணிகளைத் தின்றுவிடுகின்றன. இல்லாவிட்டால், ஆகாயம் நாற்றமெடுத்துக் கெட்டுப்போகும். கெட்டுப்போன காற்றை நாம் உட்கொள்வதால் நமக்கு நோயுண்டாகும்.

7. கோழி முதலிய சில பறவைகள் பலருக்கு உணவாகவும் பயன்படுகின்றன. பறவைகள் எல்லாம் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும். பறவை முட்டைகளும் மனிதருக்கு உணவாகின்றன.

8. பறவைகளிடத்தில் நாம் அன்பாய் இருக்க வேண்டும். சில துட்டப் பிள்ளைகள் பறவைக் கூடுகளைக் கலைக்கிறார்கள். அது பாவம். வீட்டில் வளர்க்கும் பறவைகளுக்கு வேளை தப்பாமல் உணவு கொடுத்துக் காப்பாற்றவேண்டும்.

அருஞ்சொல் :—ஊன், ஒழித்தல், ஆகாயம்.

1. அதிக உயரத்திற் பறக்கும் பறவைகள் எவை ?
2. பறவாப் பறவைகள் எவை ?
3. பறவைகளால் மனிதருக்குள்ள பயன்கள் எவை ?

## 3. எருமை

1. வீட்டு விலங்குகளில் எருமையுமொன்று. பசுவைப்போலவே அதுவும் பால் கொடுக்கும்.

எருமைக் கடா, எருதைப்போல ஏர் உழவும் சில இடங்களில் வண்டி இழுக்கவும் பயன்படுகிறது.



2. எருமை மிகவும் மந்தமான மிருகம். அதன் உடல் கொழுத்திருக்கும். கால்கள் உறுதியாயும் குட்டையாயும் இருக்கும். அதன் கொம்புகள் அதிகமாய்ப் பின்னுக்குச் சாய்ந்து நீண்டு வளைந்திருக்கும். அதன் தோல் முரடாயும் கறுப்பாயும் இருக்கும்.

3. எருமை ஈரத்தை மிகவும் விரும்பும். அது குளம் குட்டைகளிலே, தலைமட்டும் மேலே வைத்துக்கொண்டு, நெடுநேரம் அமிழ்ந்து கிடக்கும். தண்ணீர் சேறாய் இருந்தாலும், அத

ற்கு விருப்பந்தான். அது சேற்றிற் புரண்டு உடம்பு முழுவதையும் சேருக்கிக்கொள்ளும்.

4. எருமையை நாள்தோறும் நீராட்டவேண்டும். அப்பொழுதுதான் அதன் உடம்பு சுத்தமாய் இருக்கும். அதற்கு நோயும் வராமலிருக்கும். இல்லாவிட்டால் அதற்கு நோய் வரும்.

5. பசுவைவிட எருமை அதிகம் பால் தரும். பாலுந் தடிப்பாயிருக்கும். ஆனுற் பசுவின் பாலைப்போல் எருமைப்பால் உடம்புக்கு நல்லதன்று. எருமைப்பாலைக் குடித்தால் நோயுண்டாகும். பொதுவாகத் தயிருக்கும், நெய்க்குமே எருமைப் பாலைப் பயன் படுத்துவார்கள்.

6. வீட்டில் வளரும் எருமை அதிக மூர்க்கமாய் இருப்பதில்லை. காட்டெருமைகள் மிகவும் மூர்க்கமானவை. அவை மந்தை மந்தையாய்த் திரியும். அவை மிகவும் வலிமையுள்ளவை. வெகு வேகமாய் ஓடக்கூடியவை. இலங்கையிற் பெரும்பாலும் எல்லா இடங்களிலும் எருமைகள் உண்டு.

7. வீட்டெருமை வைக்கோல் புல் முதலியவைகளைத் தின்னும். பிண்ணுக்கு, பருத்திக் கொட்டை முதலியவைகளையும் அவைகளுக்குத் தீனுக வைப்பார்கள்.

அருஞ்சொல்:—மந்தம், புரளல், மந்தை.

1. எருமையின் பால் எப்படிப்பட்டது?
2. காட்டெருமைகளின் இயற்கை யென்ன?
3. எருமையை ஏன் மந்தமான மிருகம் என்பது?

## 4. கழுதை

1. கழுதை, குதிரை இனத்தைச் சேர்ந்த பிராணி. ஆனாற் குதிரை அழகுள்ளது; கழுதை அழகில்லாதது.

2. கழுதை சாம்பல் நிறமுள்ளது. குதிரையைப்போலவே அதற்கும் பிடரிமயிர் உண்டு. அதன் குளம்புகள் பிளவுபடாமலும், வால் நீண்டும் இருக்கும். வாலின் நுனியிலே கொஞ்சம்மயிர் அடர்ந்திருக்கும்.

3. கழுதை நடக்கும்போது கீழே பார்த்துக்கொண்டு நடக்கும். அதனால் அதற்குக் கால் இடறுவதில்லை. அது விகாரமாக உரத்த சத்தமிட்டுக் கத்தும். அதற்கு உதைக்குங்குணம் உண்டு.

4. புல், பிண்ணாக்கு முதலியவைகள்தான் கழுதைக்கு உணவாகும். சுத்தமான நீரைத்தான்

அது குடிக்கும். அதை மைதானங்களில் மேய விடுவார்கள். அப்பொழுது அதன் முன்னங் கால்கள் இரண்டையும் சேர்த்துக் கட்டிவிடுவது உண்டு. அதிகதூரம் ஓடிப் போய்விடாதபடி அப்படிச் செய்கிருர்கள்.

5. இந்தியநாட்டிற் கழுதை துணி கழுவு வோருக்கு மட்டுந்தான் பயன்படுகிறது. அவர் கள் துணிகளை மூட்டையாய்க் கட்டி அதன்மேல் ஏற்றிக்கொண்டு போவார்கள்.

6. ஐரோப்பா தேசத்தில் உள்ள கழுதைகள் உயரமாயும் அழகாயும் இருக்கும். அவைகள் வண்டி இழுக்கவும், ஏர் உழவும் உபயோகப்படு கின்றன. அத்தேசத்தார் அவைகளை அருமை யாய்ப் பாதுகாக்கிருர்கள்.

7. கழுதை பொறுமையுள்ள பிராணி. அதன் பால் மருந்தாக உபயோகப்படுகிறது. அருமை யாய்வளர்த்தால், அது மிகவும் பிரயோசனப்படும்.

அருஞ்சொல்:—இடறல், விகாரம், மைதானம்.

1. இந்தியநாட்டிற் கழுதை எவ்வாறு பயன்படுகின்றது?

2. ஐரோப்பா தேசத்துக் கழுதைகள் எவ்வாறு பயன் படுகின்றன ?

## 5. ஒட்டகம்

1. பிள்ளைகளே, நீண்டு வளைந்த கழுத்தும் கூனி உயர்ந்த முதுகும், குட்டை வாலும் உடைய ஒரு விலங்கைப் பார்த்திருக்கிறீர்களா ? அதன் படத்தைப் பாருங்கள். இதற்குத்தான் ஒட்டகம் என்று பெயர்.

2. ஒட்டகம் பார்வைக்கு அழகுள்ளதன்று. ஆனால், அது மிகவும் பயனுள்ளது. மணல் வெளியான பாலைவனங்களிலேதான் அதன் பயன் தெரியும்.

3. ஒட்டகத்துக்குப் 'பாலைவனக் கப்பல்' என்று ஒரு பெயரும் உண்டு. 'பாலைவனம்' என்பது வெறும் மணல் வெளியான இடமாகும். அவ் விதமான இடத்தை நம்முடைய நாட்டில் நீங்கள் பார்க்க முடியாது. அரேபியா தேசத்திலும், ஆபிரிக்காக் கண்டத்திலும் பாலை வனங்கள் உண்டு. பாலைவனங்களின் பெரும்பாகத்திற் புல், பூண்டு, செடி, மரம் என்பவை கிடையா; ஒரு சொட்டு நீருங் கிடைக்காது; அங்கு வெய்யிலோ, பொறுக்க முடியாத கொதிப்புள்ளதாயிருக்கும்.

4. அங்கே மக்களாவது, விலங்குகளாவது வாழமுடியுமா? நடமாட முடியுமா? நீரும் நிழலும் இல்லாத, நெருப்புமயமான அந்த மணல் வெளியில் ஒட்டகம் ஒன்றுதான் நடக்கும். மற்ற விலங்குகளாவது மனிதராவது அந்த மணலில் அடி வைத்தாற் கால் புதைந்து போகும்; வெந்து போகும்; வைத்த காலை எடுப்பதும் இயலாதாகும்.

5. அப்படிப்பட்ட மணல் வெளியில் ஒட்டகம் மட்டும் எப்படிப்போகிறது? ஒட்டகத்தின் உடம்பு அதற்கு ஏற்றபடி அமைந்திருக்கிறது. அதனுலேதான், ஒட்டகம் மணல்வெளியிலும் வருத்தமின்றி நடக்கிறது. ஒட்டகத்தின் காலில் மெல்லிய இரண்டு பெருவிரல்கள் உண்டு. அது நடக்கும்போது அந்த விரல்கள் அகலமாய் விரியும். அதனுல், அதன் கால் மணலிலே புதையாது.

6. பாலைவனங்கள் கடல்போல் அகன்று வெகுதூரம் பரவியிருக்கும். அவைகளைக் கடந்து போகப் பல நாட்கள் செல்லும். அதுவரையில் அந்த வனுந்தரத்தில் உணவுக்கு என்ன செய்வது? ஒட்டகத்துக்கு அந்தக் கவலை இல்லை. அது பல நாள் உணவை ஒரு நாளிலே தின்றுவிடும். தனக்கு வேண்டிய தண்ணீரையும் அப்படியே குடித்துவிடும். அப்புறம் ஆறு, ஏழு நாட்கள் வரையில் அதற்கு உணவும் வேண்டியதில்லை; நீரும் வேண்டியதில்லை.

7. பாலைவனத்திலே பிரயாணம் செய்ய விரும்புவோர், முதலில் ஒட்டகம் தின்னக் கூடிய வரையில் அதற்கு உணவு கொடுப்பார்கள். உணவை உண்ண உண்ண, அதன் முதுகின்

உச்சியிலே சதையுங் கொழுப்புந் திரண்டு ஒரு மேடு உண்டாகும். அதற்குத் "திமில்" என்று பெயர். சில ஒட்டகங்களுக்கு இரண்டு திமில்கள் உண்டு. திமில் கரைகிறவரையில் அதற்கு உணவு வேண்டியதில்லே.

8. ஒட்டகத்தின் இரைப்பை மிகவும் பெரியது. அது ஐந்தாறு நாளேக்கு வேண்டிய நீரை ஏற்றுக்கொள்ளும். ஆகையால் ஒட்டகம் நாட்கணக்காய்த் தண்ணீர் வேண்டாமல் இருக்கக்கூடும். அது பாரமான சுமைகளேயுஞ் சுமக்கும். பிரயாணிகள் ஒட்டகத்தின்மேலே தங்கள் சுமையை ஏற்றித் தாங்களும் அதில் ஏறிக்கொண்டுபோவார்கள்.

அருஞ்சோல்:—குட்டை, பாலேவனம், மக்கள், வனுந்தரம்.

1. பாலேவனம் என்ருலென்ன ?
2. ஒட்டகத்தை ஏன் பாலேவனக் கப்பல் என்பது ?

## 6. காடிக்குத் தப்பினவர்கள்

1. கண்ணன், பொன்னன் என்று இரண்டு நண்பர்கள் இருந்தார்கள். ஒருநாட் கண்ணன் தன் ஊரைவிட்டு வெகுதூரத்தில் உள்ள வேருேர் ஊருக்குப் போகவேண்டியிருந்தது. வழியில் ஒரு சிறு காடு இருந்தது. அதைக் கடந்துதான் இந்த ஊரிலிருந்து அந்த ஊருக்குப் போகவேண்டும்.

2. 'அஞ்சாமல் தனி வழியே போகவேண்டாம்' என்று ஒரு நீதிவாக்கியம் இருக்கிறதல்லவா? அதை எண்ணிக் கண்ணன் யாரையாவது துணையாகத் தன்னுடன் அழைத்துக்கொண்டு போக



விரும்பினுன். இந்த விருப்பத்தைப் பொன்ன னிடம் சொன்னுன். பொன்னன் தான் துணை வருவதாக ஒப்புக்கொண்டான்.

3. பிறகு அவர்கள் இருவரும் சேர்ந்து பிர யாணஞ் செய்யத் தொடங்கினுர்கள். வழியிலி ருந்த காட்டின் நடுவே அவர்கள் போனபோது, எதிரே ஒரு கரடி வருவதைக் கண்டார்கள். கண்ட வுடன் இருவருக்கும் திகில் உண்டாய் விட்டது.

4. கண்ணன் தன் நண்பனைப்பார்த்து, "பொன்னு, இப்பொழுது நாம் என்ன செய்வது? என் கையில் ஒரு தடி இருக்கிறது. உன் கையிலும்

ஒரு தடி இருக்கிறது. இருவருமாய்ச் சேர்ந்து எதிர்த்தாற் கரடி ஓடிப்போய்விடும். அப்படிச் செய்யலாமா ?" என்றான்.

5. அதற்குப் பொன்னன், "அது இடையூறுக்கு இடமாகும். துப்பாக்கி இருந்தாற் கரடியைச் சுட்டுவிடலாம். வெறுந் தடியை வைத்துக் கொண்டு ஒரு பொல்லாத விலங்கை எதிர்க்க முடியுமா ? எனக்கு ஒரு சூழ்ச்சி தோன்றுகிறது. கரடிக்கு மரம் ஏறத்தெரியாது. நாம் இருவரும் ஒரு மரத்தில் ஏறித் தப்பிக்கொள்ளலாம்" என்றான்.

6. கண்ணன், "எனக்கு மரம் ஏறத்தெரியாதே" என்றான். பொன்னன் பசபச என்று விழித்து, "அதற்கு என்ன செய்கிறது? கரடி நெருங்கி வந்து விட்டது. நாம் வீண் எண்ணம் எண்ணிக்கொண்டு நிற்பதிற் பயனில்லை. நான் ஒரு மரத்தில் ஏறிக்கொள்கிறேன். நீயும் மெதுவாய்த் தொத்தித் தொத்தி ஒரு மரத்தில் ஏறிக் கொள்" என்றான்.

7. கண்ணண் முகம் வாடி ஏதோ விடை சொல்ல வாயெடுத்தான். பொன்னன் அதை நின்றுகூடக் கேளாமல் ஓடிப்போய் ஒரு மரத்தில் ஏறிக்கொண்டான்.

8. கண்ணன் என்ன செய்வான், பாவம் ! கரடி நெருங்கி வந்துவிட்டது. தாமதித்து நின்றால் இன்னும் கொஞ்ச நேரத்தில் அவன் கரடியாற் கொல்லப்படுதல் திண்ணம். அந்தச் சமயத்திலே, கடவுளே அவனுக்கு உதவி செய்ததுபோல ஓர் உபாயந் தோன்றியது.

9. கரடி முதலிய சில விலங்குகள் செத்த பிணத்தைத் தீண்டா என்று அவன் எங்கேயோ

படித்திருந்தான். அது இப்பொழுது நினைவிற்கு வந்தது. 'அது உண்மையானால் பிழைப்பேன். இல்லாவிட்டாற் சாவேன். கடவுள்தான் எனக்குத் துணை' என்று எண்ணி, அவன் கீழே படுத்து, மூச்சை அடக்கிக்கொண்டு பிணம்போலக் கிடந்தான்.

10. கரடி அவனண்டை வந்து, அவன் முகத்தைமோந்துபார்த்துவிட்டு, அவனைப்பிணம் என்று நினைத்து ஒன்றுஞ் செய்யாமற் போய்விட்டது. கரடி கண்ணுக்கு மறைந்தபிறகு, பொன்னன் மரத்தைவிட்டுக் கீழே இறங்கிவந்தான். கண்ணனும் மெல்லக் கண்ணை விழித்துப் பார்த்துவிட்டு எழுந்தான். பொன்னன் அவனை நோக்கி, "கண்ணா! உன் காதில் ஏதோ மந்திரம் சொன்னதே அது என்ன"? என்றான். அதற்குக் கண்ணன் "ஆம், பொன்னா! 'ஆபத்தில் உதவாத தோழனை நம்பாதே' என்று கரடி எனக்குப் புத்தி சொன்னது" என்றான். பொன்னன் வெட்கித் தலை குனிந்து கொண்டான்.

அருஞ்சொல்:—திகில், இடையூறு, சூழ்ச்சி, மந்திரம்.

1. பொன்னன் செய்த பிழை என்ன?
2. கண்ணன் எவ்வாறு தப்பினான்?

## 7. சோம்பேறி திருந்தியது

1. ஆனந்தன் ஓர் ஏழைப்பிள்ளை. அவன் பெற்றோர், அவனுக்கு நல்ல உடை உடுத்திப் புத்தகங்கள் வாங்கிக்கொடுத்துப் பள்ளிக்கு விட்

டார்கள். அவன் படிப்பில் வல்லவன் ஆகவேண்டும் என்பது அவர்கள் கருத்து.

2. ஆனந்தனுக்கோ, படிப்பிலே கருத்துச் செல்லவில்லை. அவன் படிப்பை விரும்பாமல், எப்பொழுதும் சோம்பேறியாய்த் திரிவதையே

விரும்பினுன். படிப்பதென்முல் அவனுக்கு வெறுப்பாய் இருந்தது.

3. அவன் காலையிற் படுக்கையைவிட்டு எழும்ப ஏழுமணியாவது செல்லும். தாய் தந்தையர் அடிக்கடி அருட்டுவதால், அவன் வெறுப் போடு பாடசாலைக்குப் புறப்படுவான். புத்தகங் களை ஒரு பற்றைக்குள் வைத்துவிட்டுத் தெருத் தெருவாய்த் திரிவான். உச்சிப்பொழுதிலே, பாட சாலை முடியும் நேரம் பார்த்து, வீட்டுக்கு வந்து, உணவு உண்டு, திரும்பவும் வீணே விளையாடச் சென்று, வீடு சேர்வான். நாடோடிகளாய்த் திரி யும் பிள்ளைகளே இவனது கூட்டாளிகள்.

4. ஒருநாள் இவன் பாடசாலைக்குச் செல்லா மல், வழக்கம்போல் அங்கும் இங்கும் அலைந் தான். இவனேடுகூட விளையாட, நாடோடிகளில் ஒருவனுவது அகப்படவில்லை. அதனுல் முகம் வாடி ஒரு சோலைக்குள்ளே புகுந்தான். போகும் வழியில் ஒரு பறவை, சிறு குச்சிகளைப் பொறுக்கிக் கொண்டிருந்தது. ஆனந்தன் அதனை நோக்கி:—

(தெம்மாங்கு)

“ காற்றுலவுங் காலை யிலே
கமழு மலர்ச் சோலை யிலே
பார்த் துலந்த சுள்ளி யெல்லாம்
பறந் தெடுக்கும் பறவை யிரே
பாடி ஆடிடு வோம்—சற்றே
பரிந்து வந்திடுவீர்” என்று அழைத்

தான்.

5. அதற்குப் பறவை :—

"சுள்ளி பல பொறுக் கிடுவேன்
தொடுத்துக் கூடு கட்டிடுவேன்
வெள்ள மழை வருவதன் முன்
வீட்டில் வாழ்ந்து விளங் கிடுவேன்
விளையாட மாட்டேன்—காலம்
வீண் போக்க மாட்டேன்" என்று
விடைகூறிப் பறந்து போய் விட்டது.

6. அப்பால், ஒரு தேனீ பறந்து வருவதை ஆனந்தன் கண்டு :—

"இரைந் திரைந்து பறந்து வரும்
எழில் மிகுந்த தேனீ யிரே
விரைந்து செல்லல் விடுத்திடு வீர்
விளையாட வந்திடு வீர்
மெத்தவும் நொந்தேன்—தனியே
தத்தளிக்கின்றேன்" என்று விளித்தான்.

7. அதற்குத் தேனீ :—

"பூக்கள் தொறும் பறந் திடுவேன்
புதிய தேனை எடுத் திடுவேன்
ஆக்க மெனக் கூட்டினிலே
அதனை நன்று சேர்த்திடு வேன்
அரைக் கணந் தானும்—தரியேன்
அகன்றிடுங் காணும்" என்று சொல்
லிப் பறந்து போய் விட்டது.

8. பின்பு ஆனந்தன் செய்வது என்ன வென்று தெரியாமற் சிறிது தூரம் நடந்தான். வழியிற் சில எறும்புகள், மிகச் சுறுசுறுப்பாய்ப்

பூச்சரம்போல நிரையாகத் தொடர்ந்து செல்வ தைக்கண்டான். கண்டதும் உவகை கொண்டு அவைகளைப்பார்த்து:—

"ஊர்ந்து செல்லும் எறும்பு களே
ஊக்க முள்ள எறும்பு களே
சேர்ந்து விளை யாடிடு வோம்
தெம்மாங் கெல்லாம் பாடிடு வோம்
சினந் தவிர்ந் திடுவீர்—இங்கே
சிறிது நின்றிடு வீர்" என்று கூப்பிட்

டான்.

9. அதற்கு எறும்புகள்:—

பள்ளிக் கூடஞ் செல்லாமலே
பாட மொன்றுங் கல்லாமலே
துள்ளி வீணே நாட் கழிக்கும்
சோம் பேறியே அகன் றிடடா
சும்மா தரித்திடோம்—உன்போற்
சோம்பி யிருந்திடோம்" என்று சொல்

லித் தம்வழியே போயின.

10. பார்த்தான் ஆனந்தன்; சிறிது நேரம் ஆழ்ந்து சிந்தித்தான். "இஃதென்ன? எங்கே பார்த்தாலும் ஊக்கம்! ஊக்கம்! என்ற சொல்லே கேட்கப் படுகின்றது. என்னிடத்தில் மாத்திரம் ஊக்கம் இல்லை. இஃது எவ்வளவு வெட்கம்? இனிமேல் யானும் ஊக்கம் கொள்ளவேண்டும். கருத்தாய்ப் படிக்கவேண்டும்" என்று உறுதி கொண்டான். அன்று தொடக்கம் பாடசாலைக் குச்சென்று கருத்தாய் படித்து வந்தான். வகுப்

பில் முதலிடம் பெற்ருன். ஆசிரியர் அவனைப் பாராட்டினர்.

" ஊக்கமது கைவிடேல்."

திரு. மு. ந.

அருஞ்சொல் :—அருட்டல், அகப்படல், உலவல், கமழல், பரிந்து, எழில், விளித்தல், தரியேன், சரம், உவகை, ஆழ்ந்து சிந்தித்தல், ஊக்கம்.

1. நாடோடிகள் என்ருல் யார்?
2. ஆனந்தனுக்குப் பறவைகூறிய விடையென்ன?
3. தேனீ கூறிய விடையென்ன?
4. எறும்புகள் கூறிய விடையை எழுது?

## 8. குதிரை

1. குதிரை மிகவும் பயனுள்ள விலங்கு. நன்ருகப் பழக்கினுல், அது பலவகையில் நமக்கு உதவிசெய்யும். அது விரைவாய் ஓடும். அதன் மேலேறிச் சவாரி செய்யலாம். அது வண்டி இழுக்கும். வேட்டையாடவும் குதிரைகள் பயன் படுவது உண்டு. பந்தயத்துக்கும் குதிரைகளைப் பழக்குகிருர்கள். அவை பொதுவான குதிரைகளைவிட மிகவும் வேகமாய் ஓடும். பழையகாலத்தில் எம்முன்னேர் இரண்டு, மூன்று, நான்கு குதிரைகள் பூட்டிய தேர்களில் ஏறிச்சென்ருர்கள்.

2. குதிரை பார்ப்பதற்கு அழகாய் இருக்கும். குதிரைகள் பல நிறம் உள்ளவை. சிவப்புக் குதிரைகளே பொதுவாய் எங்குங் காணப்படுகின்றன. சில குதிரைகள் சுத்த வெள்ளையாகவாவது



சுத்தக் கறுப்பாகவாவது இருக்கின்றன. பழுப்பு அல்லது சாம்பல் நிறமான குதிரைகளும் உண்டு. சில குதிரைகள் இரண்டு மூன்று நிறங்கள் கலந் தனவாய் இருக்கும்.

3. குதிரை சற்றேறக்குறைய மாட்டின் உயர மும் பருமனும் உடையதாயிருக்கும். அதன் கழுத்து, மாட்டின் கழுத்தைப்போல மிக நீண்டி ராது. கொஞ்சம் நீண்டு அழகாய் இருக்கும். அதற்குப் பிடரி மயிர் உண்டு. வாலிலும் அடியி லிருந்து நுனிவரையில் மயிர் அடர்ந்திருக்கும். சிலர் குதிரையின் வால் மயிரிற் பாதிக்குமேற் கத் தரித்து விடுவதுண்டு. குதிரையின் உடம்பு மென் மையாய் இருக்கும். ஆகையால் அதை வளர்க்

கிறவர்கள் வைக்கோலை மெத்தையாகத் தைத்து அதற்குப் படுக்கை போடுவார்கள்.

4. குதிரையின் கால்கள் நான்கும் உறுதியாய் இருக்கும். ஆடுமாடுகளின் கால்களில் இருப்பதுபோலவே குதிரையின் கால்களிலும் குளம்புகள் இருக்கின்றன. ஆனாற் குதிரைக்குக் கொம்புகள் இல்லை. குதிரைக் குளம்புகள் பிளவுபட்டிரா; ஒற்றையாய் இருக்கும். கொம்புள்ள விலங்குகளுக்குத்தான் குளம்புகள் பிளவுபட்டிருக்கும். குதிரைக் குளம்புகள் தேய்ந்துபோகாதபடி அவைகளுக்கு இலாடம் அடிப்பார்கள்.



5. குதிரைக்குப் புல்லும், கொள்ளு, கடலை முதலிய தானியங்களும் உணவாகும். ஆடுமாடுகளைப்போலக் குதிரை அசைபோடுகிறதில்லை. குதிரை சுகத்தை விரும்பும் விலங்கு.

6. ஆசியா, அமெரிக்கா என்னுந் தேசங்களிலே சில இடங்களிற் காட்டுக்குதிரைகள் கூட்டங் கூட்டமாய்த் திரிகின்றன. அவுஸ்திரேலியா தேசத்திலும் குதிரைகள் மிகுதியாய் இருக்கின்றன. அரேபியா தேசத்துக் குதிரைகள் மிகவும் பெயர்போனவை. அவை, மற்றக் குதிரைகளை விட உயரமாயும் அழகாயும் இருக்கும். அரேபியர்கள் குதிரைகளை மிகவும் அருமையாய் வளர்க்கிறார்கள். இலங்கையில் நெடுந்தீவிலே குதிரைகள் வளர்க்கப்படுகின்றன. அந்தக் குதிரைகள் நன்றாய் உழைக்கக்கூடியவை.

7. குதிரை மிகவும் புத்தியுள்ள விலங்கு. அதை நாம் எப்படிப் பழக்குகிறோமோ அப்படிப் பழகும். அது தன்னை வளர்க்குந் தலைவனிடத்தில் மிகவும் விருப்புடையதாயும் நன்றியறிதல் உள்ளதாயும் இருக்கும். நாமும் அதனிடத்தில் அன்பாய் இருக்கவேண்டும்.

1. பந்தயக் குதிரைகள் என்றாலென்ன ?

2. குதிரையின் குளம்புக்கும் மாட்டின் குளம்புக்குமுள்ள வேறுபாடென்ன ?

3. அசைபோடுத லென்றாலென்ன ?

## 9. உப்பும் சருக்கரையும்

ஒருநாள் ஒரு சிற்றுண்டிக்கடையில் உப்பும் சருக்கரையும் ஒன்றையொன்று சந்தித்தன. சருக்கரை உப்பைப்பார்த்தும் பாராததுபோல இருந்தது. ஆனால் உப்பு அதைத்தன் நண்பன் என்று எண்ணி :

"வாரும் வாரும் சருக்கரை யாரே
நீரும் நானும் சேர்ந்தது சீரே"

என்றது. சருக்கரை அதை இறுமாப்போடு திரும்பிப்பார்த்து :

"உப்பே உன்னை நானறி வேனே
இப்போ தேன்னை ஏனழைத் தாயே"

என்று வெடு வெடுப்பாய்க் கேட்டது.

2. அதைக் கேட்கவும் உப்புக்குக் கொஞ்சம் வருத்தம் உண்டாயிற்று. ஆனாலும் அது பொறுமையோடு மறுபடியும் சருக்கரையை நோக்கி :

"நல்லோ னெனவே நானழைத் தேனே
பொல்லா மொழி நீ புகலுவ தேனே ?"

என்றது. சருக்கரை பின்னும் அதிக செருக்குக் கொண்டு :

"பிச்சைக் காரர் தமக்குற வானாய்
இச்சை ஏன் நீ எனக்குற வாகாய்"

என்று சினத்தோடு சொல்லிவிட்டு, முகத்தை வேறு பக்கமாய்த் திருப்பிக்கொண்டது :

3. சருக்கரையின் பெருமையைப் பார்க்க உப்புக்கு மனம் பொறுக்கவில்லை. அது மிகவும் வெறுப்போடு நேற்று வந்த சருக்கரையே இப்படித் திரும்பி என்னைப்பார்! உன் வாழ்வெல்லாம் நேற்று வந்த வாழ்வு! நீ வெளிவந்த வரலாறு எனக்குத் தெரியாதா ?

"சோலைக் கரும்பில் ஒளித்திருந் தாயே
ஆலையிற் சாறாய்ப் பிழிந்தெழுந் தாயே
சாற்றைக் காய்ச்சச் சருக்கரை யானாய்
நீற்றை யிடவே நீவெளுப் பானாய்"

எல்லாம் எனக்குத் தெரியும். பாசியாவது எலும்பு சுட்ட கரியாவது சேர்த்துக்கூட உன்னை வெளுப் பாக்குவார்களே, நான் அறியேனோ? என்றது.

4. அதற்குச் சருக்கரை, நீ மட்டும் என்ன வானத்திலிருந்து குதித்து விட்டாயோ ?

“நீயும் கடலிற் கலந்தலைந் தாயே
பாயும் கழியிற் புகுந்து வந்தாயே
பாத்தியில் நீரைப் பாய்ச்சினர் காணாய்
நேர்த்தி செய் வெயிலால் நீ யுருவானாய்”

இதுமட்டுமா? நீ பூமிக்குள்ளேகூட ஒளித்திருப்ப தில்லையா ? நிலத்தைத் தோண்டி உன்னை வெட்டி வெளியில் எடுப்பதில்லையா ? என்றது.

5. உப்பு இதைக்கேட்டு, “எல்லாஞ் சரிதான், என் உதவியில்லாமல் எவரும் சாப்பிடவே முடி யாது. உன் உதவியவ்வளவு அவசியமல்லவே” என்றது. சருக்கரை, “அது உண்மைதான்; அத னால் யாருக்குப் பெருமை? நீ உன் நிலையை அறி யாமற் பேசுகிறாய். ஆனாலும் நீ வயதில் எனக்கு மூத்தவனாயிருக்கிறாய். அடிக்கடி நான் இருக்கும் இடத்துக்கு வருகிறாய், உன்னோடு பகைமை ஏன்? இனி இருவரும் நட்பாய் இருப்போம், போய்வா” என்றது. உப்பு எல்லா உணவுகளிலும் புகுந்து கொண்டது. சருக்கரை சில உணவுகளிற் புகுந்து கொண்டது.

அருஞ்சொல்:—சீர், இறுமாப்பு, வெடுவெடுப்பு, செருக்கு, பகைமை, நட்பு.

1. சருக்கரை, உப்பைப் பார்த்து, “பிச்சைக்காரர் தமக் குறவானாய்” என்று ஏன் சொன்னது ?

2. சருக்கரை எவ்வாறு உண்டாக்கப்படுகின்றது ?

3. உப்பு எவ்வாறு உண்டாகின்றது.

# 10. குரங்கு

1. குரங்குகளிற் பலவகை உண்டு. படத்தில் இருப்பவை பொதுவான குரங்குகள். இவ்வித மான குரங்குகளைத்தான் குரங்காட்டி கொண்டு வந்து வேடிக்கை காட்டுவான். அதை நீங்கள் பார்த்திருப்பீர்கள்.



2. குரங்கு உருவத்திற் பெரும்பாலும் மனி தனைப்போல் இருக்கும். அதன் கால்கள் நான் கும் கைகள்போல அதற்கு உதவுகின்றன.



3. சிலர் குரங்கை வீட்டில் வைத்து வளர்க்கிருர்கள். குட்டியாய் இருக்கும்போதே பிடித்துப் பழக்கினுல் அது பழகிச் சாதுவாய் இருக்கும். ஆனுலும் அதனேடு பழகுவதில் மிகவும் விழிப்பாய் இருக்கவேண்டும். நாம் அதனிடம் ஏதாவது குறும்புத்தனம் செய்தால் அது நம்மேல் விழுந்து நம்மைக் கடிக்கும்.

4. குரங்கு நுண்ணறிவுள்ள விலங்கு. யாராவது ஏதாவது செய்வதைப் பார்த்தால் அதுவும் அப்படியே செய்யும். நாம் ஏதாவது செய்யும்படி கற்றுக்கொடுத்தால் அது மிக விரைவாகக் கற்றுக்கொள்ளும். குரங்காட்டிகள் கொண்டுவரும் குரங்குகள் பல வேடிக்கைகள் செய்யும்.

5. குரங்குகள் மரத்துக்கு மரம் தாவும். பொதுவான குரங்குகளுக்கு வால் நீளமாயிருக்கும். உடம்பில் மயிர் அடர்ந்திருக்கும். வால் இல்லாத குரங்குகளும் சில தேசங்களில் உண்டு. அவை நிமிர்ந்து நின்ருல் மனிதனளவு உயரம் உள்ளவைகளாகக் காணப்படும். சிலர் அவைகளைப் பிடித்துப் பழக்கிப் பல உறுதியான வேலைகளைச் செய்யச் செய்கிருர்கள்.



6. குரங்கின் கன்னங்கள் இரண்டும் பைகள் போலத் தொய்வாய் இருக்கும். தின்பண்டங்களை அந்தப் பைகளில் அடக்கிக்கொண்டு பிறகு மெது வாய்த் தின்னும். குரங்குக்குக் "கடித்ததெல்லாம் கரும்பு பிடித்ததெல்லாம் இரும்பு" என்னும் பழ மொழியை நீங்கள் கேட்டிருக்கிறீர்களா?

அருஞ்சொல்:—நுண்ணறிவு, குறும்புத்தனம் பழமொழி.

1. குரங்குகளின் கால்கள் எப்படிப்பட்டவை?
2. குரங்கு என்ன என்ன விளையாட்டுகள் விளையாடும்?

# 11. எறும்புகளும் தத்துக்கிளியும்

1. ஒரு மலையடிவாரத்திற் பல எறும்புகள் கூடி வாழ்ந்திருந்தன. அவைகள் ஒரு நொடிப் பொழுதாவது சோம்பலாய் இருக்கவில்லை. எப் பொழுதும் ஏதாவது வேலை செய்துகொண்டே இருந்தன.

2. அந்த எறும்புகள் வாழ்ந்த இடத்துக்கு அருகில், ஒரு புதரில், ஒரு தத்துக்கிளி இருந்தது. அது ஒருவேலையுஞ் செய்வதில்லை. எப்பொழுது பார்த்தாலும் அங்குமிங்குந் தத்திக் குதித்து விளை யாடிக்கொண்டிருந்தது. அதை வெட்டுக்கிளி என்றுஞ் சொல்வதுண்டு.



3. ஒருநாள் அந்தத் தத்துக்கிளி ஓயாமல் வேலை செய்துகொண்டிருந்த எறும்புகளைப் பார்த்து, " நீங்கள் ஏன் இப்படி வருத்தப்பட்டு

உழைக்கிறீர்கள்" என்று கேட்டது. அதற்கு எறும்புகள் "உழைக்காமல் இருந்தால் உணவு அகப்படுமா"? என்றன.

4. "நான், எது கண்ணில் அகப்பட்டதோ அதை உண்டு சுகமாய் இருக்கவில்லையா? உணவுக்காக ஓயாமல் உழைப்பதேன்? என்று தத்துக்கிளி மறுபடியுங் கேட்டது. அதற்கு அந்த எறும்புகள், "இப்பொழுது உணவு கிடைத்தாற் போதுமா? மழைக்காலத்தில் என்னசெய்வது? அப்பொழுது வெளியில் வரமுடியுமா? வந்தாலும் உணவு அகப்படுமா?" என்றன.

5. தத்துக்கிளி "ஏன் அகப்படாது! நான் ஒருநாளும் உணவு அகப்படாமல் வருந்தியதில்லை" என்றது. "அது உனக்கு இப்பொழுது தெரியாது, மழைக்காலம் வந்தபின்பேதெரியும்" என்று சொல்லிவிட்டு எறும்புகள் போய்விட்டன.

6. மழைக்காலம் வந்தது. தத்துக்கிளிக்கு உணவு அகப்படவில்லை. இருக்க இடமுமில்லை. அது எறும்புகளின் வளையண்டைபோய் உதவி கேட்டது. எறும்புகள் இரக்கப்பட்டுக் கொஞ்சம் உணவுமட்டுங் கொடுத்தன. இருக்க இடம் அகப்படாமல் அது தவித்து இறந்துபோயிற்று. வசதியானபோது தேடிவையாதவர்கள் நொந்தகாலத்தில் இப்படியே வருந்துவார்கள்.

அருஞ்சொல் :—நொடிப்பொழுது, புதர், வளை.

1. தத்துக்கிளியின் இயற்கையென்ன ?
2. எறும்புகளின் இயற்கையென்ன ?

# 12. பொய் சொல்லி உயிர் இழந்தது

சிந்து (‘ நீர்நிலவளமுடைய ’ என்பது போன்றது)

1. பைந்தழை மரச்சோலை—சூழ்ந்த
பட்டி யூரில் உற்ற கதை
இட்ட மாய்ச்சொல் வேன்
கந்தனென் றோரிடையன்—அடுத்த
காட்டி னிலே ஆட்டி னத்தை
ஓட்டிச் செல்லுவான் (பைந்தழை)

2. புல்லினை மேயவிடுவான்—இலைதழை
போ தியமட் டுந்திரட்டிப்
போட்டுக் கொள்ளு வான்
நல்ல நீர், ஆறுகுளத்தே—குடிக்க
நன்று காட்டி என்றும் ஊட்டி
நன்மை புரிவான் (பைந்தழை)

3. பொல்லாத வீம்புக் காரன்—சும்மா
பொய்க்கதை உரைப்பதிலே
மிக்க சமர்த்தன்
எல்லா ரையும் ஏமாற் றிடுவான்—ஒருநாள்
இப்பயல் செய் தப்பிதத்தைச்
செப்பிடு கிறேன் (பைந்தழை)

4. “ஐயையோ ! புலிவந்த தே !—என்றன்
ஆட்டை யெல்லாங் கொல்லுமுன்னே
ஓட்ட மாய் வாரீர்
பொய்யல்ல” வென்று கூவினான்—கேட்டோர்
பொல்லெடுத்துக் கொல்லவரப்
பல்லை யிளித்தான் (பைந்தழை)

5. வந்த வர்கள் சினத்துடனே—மீண்டார்
மற்ரெருநாள் உண்மையாக
வந்த தேபுலி
"இந்த விதிக் கென்ன செய்குவேன்"—என்றே
ஏங்கி யவன் மெத்த மெத்தத்
தேம்பி யழுதே (பைந்தழை)

6 "புலி! புலி! உண்மையாய்ப் புலி!—மெத்தப்
புண்ணியமுண் டாமுதவி
பண்ணுவீ ரையா
கொலை செய்து தின்ன வந்த தே—உம்மைக்
கும்பிட் டேன்கும் பிட்டேன்தடி
கொண்டுவரு வீர்" (பைந்தழை)

7. என்றிரந்து கூவியுமென் னே—பொய்யென்
றெண்ணியாரு மவ்விடத்தை
நண்ணவே இல்லை
கொன்ற தெல்லா வாடுகளையும்—பின்னே
கோலிடைய னுவியையுங்
கொள்ளை கொண்டதே (பைந்தழை)

8. வேடிக்கைக்கும் பொய்யு ரைக்காதீர் - பின்னால்
மெய்யுரைத்த போதிலும் பொய்
பொய்யெனக் கொள்வார்
நாடி நாடி உண்மை பேசுவீர்—அதனுல்
நன்மை நன்மை கோடி நன்மை
நாடி வருமே (பைந்தழை)

திரு. மு. ந.

அருஞ்சொல்:—பைந்தழை, திரட்டல், ஊட்டல், வீம்பு, சமர்த்தன், நண்ணல், கோலிடையன், கொள்ளைகொள்ளல், நாடுதல்.

1. இடையன் செய்த தப்பிதம் என்ன?
2. விளையாட்டுக்குப் பொய் சொன்னுலென்ன?

# 13. காகமும் கிளியும்

1. ஒரு வீட்டுத் தாழ்வாரத்திலே ஒரு கிளிக் கூடு இருந்தது. அந்தக்கூடு பித்தளைக் கம்பிகளாற் செய்யப்பட்டது. அது மிகவும் அழகாய் இருந்தது. அதற்குள் ஒரு பச்சைக்கிளி தூங்கி விழுந்துகிடந்தது. கூட்டுக்குள்ளே, கிளிக்கு உணவாக ஒரு வாழைப்பழமும் சிறிது சோறும் இருந்தன.





2. இரை தேடித்திரிந்த காகமொன்று பறந்து வந்து, அந்தக்கிளிக் கூட்டினருகே அமர்ந்திருந்தது. கூட்டுக்குள்ளே இருந்த பழத்தையுஞ் சோற்றையும் பார்க்கப் பார்க்க அதற்கு வாயில் நீர் ஊறியது. அது ‘கா கா’ என்று கரைந்தது.

3. அதைக்கேட்டுக் கிளி விழித்து எழுந்து “நீ யாரடா” என்று கேட்டது. காகம் கண்

ணைச் சாய்த்துக்கொண்டு கிளியைப் பார்த்து, "என்னை அறியாதவர்கள் உண்டா? நீதான் ஏதோ புதுமையாய் என்னை யாரென்று கேட்கிறாய். கூட்டில் இருக்கிற பெருமையல்லவா உன்னை அப்படிக் கேட்கச்சொல்லுகிறது? நான் காகம் என்பது உனக்குத் தெரியாதா?" என்றது.

4. அதற்குக் கிளி, "தெரியும், நீ ஏன் என்னண்டை வந்தாய்? நீ என்னைப்போல ஒரு பறவைதான்; ஆனால் உனக்கும் எனக்கும் மிக வேறுபாடு உண்டு; நீ பார்ப்பதற்கு மிகவும் அருவருப்பாய் இருக்கிறாய்; உன் உடம்பு கரிபோலக் கறுப்பாய் இருக்கிறது; உன் குரலும் காதுக்கு இனிமையாய் இருப்பதில்லை; என்னைப்போல உனக்குப் பேசவுந் தெரியாது; கா கா என்று கரையத்தான் தெரியும்" என்றது.

5. காகம் தலையைத் திருப்பித் திருப்பி, அதை இந்தக் கண்ணாலும் அந்தக் கண்ணாலும் மாறி மாறிப் பார்த்தது. "கிளியே! நீ உன்னை மிகவும் பாராட்டிப் பேசுகிறாய். உன்னைப்போல் எனக்குப் பச்சை உடம்பும் சிவப்பு மூக்கும் இல்லை என்பது உண்மைதான். ஆனால் எனக்குள்ள சுறு சுறுப்பும் சுத்தமும் உனக்கு உண்டா? நான் அதிகாலையில் எழுந்துவிடுகிறேன். அங்கும் இங்கும் சுற்றி இரை தேடுகிறேன். நாளும் தவறாமற் குளிக்கிறேன். இந்த நல்ல வழக்கங்களில் ஒன்றாவது உன்னிடத்தில் இருக்கிறதா?" என்றது.

6. கிளி, "உன் சுத்தத்தையும் சுறு சுறுப்பையும் நீதான் மெச்சிக்கொள்ளவேண்டும்: நீ கண்டதைத் தின்கிறாய்; தெருவிலே கிடக்கும் அழு

கிய பண்டங்களையும் செத்துப்போன எலி முதலிய வைகளையும் வாய் கூசாமல் உண்டுவிடுகிறாய்; உனக்குச் சுத்தம் என்னவென்று தெரியாது; நீ இரை தேடுகிற பெருமை எனக்குத் தெரியும்; வெய்யிலில் ஏதாவது காயவைத்திருந்தால் அதைக் களவாய்க் கொத்திக்கொண்டு ஓடிப்போவாய்; சிறு குழந்தைகள் கையிலே தின்பண்டங்கள் வைத் திருந்தால், வெடுக்கென்று பிடுங்கிக்கொள்வாய்; உன் குணம் தெரிந்துதான் எல்லாரும் உன்னைக் கண்டால் வெருட்டுகிறார்கள்" என்றது.

7. காகம் அதை நோக்கி, "அழுகிய பண்டங் களையும் செத்த பிராணிகளையும் நான் தின்னுவிட் டால், ஆகாயம் நாற்ற மெடுத்துப்போகும்; காற் றுத்தூய்மை இழந்துவிடும்; அந்தக் கெட்ட காற் றை உட்கொள்வதால் மனிதர்கள் நோயடைவார் கள்; மற்ற உயிர்களும் வருந்தும்; ஆதலால் அந்த நாறிய பொருள்களைத்தின்று நான் ஆகா யத்தைச் சுத்தப்படுத்துகிறேன்; அது மனிதர் களுக்குத் தெரியும்; அதனால் அவர்கள் என்னை "ஆகாயத்தோட்டி" என்று கருதி என்மேல் அன் பாய் இருக்கிறார்கள்; என்னைக் கூப்பிட்டு எனக்கு உணவு கொடுக்கிறார்கள்; உன்னைப்போல நான் அகப்பட்டதைத் தனியே தின்றுவிடமாட்டேன்; என் இனத்தார்களையும் கூப்பிட்டு எல்லாரோடும் சேர்ந்துதான் தின்பேன்" என்றது.

8. "எல்லாம் சரிதான். மனிதர்கள் என்னை எவ்வளவு அருமையாய் வளர்க்கிறார்கள் பார்; எனக்கு அழகான கூடு இருக்கிறது; சுவையுள்ள உணவு இருக்கிறது" என்று கிளி சொல்லியது.

அதற்குக் காகம் "கூட்டில் அடைபட்டிருப்பதை நீ ஒரு பெருமையாக எண்ணுதே; என்னைப்போல நினைத்த இடத்திற்குப் பறந்துபோக உன்னுல் முடியுமா? சிறையில் இருக்கிருய். இதோ பார் நான் பறந்துபோகிறேன்" என்று சொல்லிவிட்டுப் பறந்து போயிற்று.

அருஞ்சொல்:— தாழ்வாரம், கரைந்தது, அருவருப்பு, மெச்சுதல், தூய்மை, சுவை.

1. காகம் ஏன் தலையைச் சாய்த்துப் பார்த்தது ?
2. கிளியின் இயற்கை யென்ன ?
3. காகத்தின் இயற்கை யென்ன ?



## 14. மரம்

ஆசிரியர்:—"மணி! நீ பிராணிகளைப் பற்றிப் படித்திருக்கிருய், அல்லவா ?"

மணி :—“ படித்திருக்கிறேன். தாவரமொழிந்த ஏனை உயிர் உள்ளவைகளுக்குப் பிராணிகள் என்று பெயர்.”

ஆ :—“ ஆம், உயிராவது பிராணன். பிராணன் உள்ளது பிராணி. பிராணிகளில் எத்தனை வகை உண்டு? சொல், பார்ப்போம்.”

ம :—“ பலவகைகள் உண்டு, ஊரும் பிராணிகள், பறக்கும் பிராணிகள், நடக்கும் பிராணிகள், நீந்தும் பிராணிகள் என்று அவைகளுக்குப் பெயர்.”

ஆ :—“ நன்று! நன்று! நீ கெட்டிக்காரன். உனக்கு எல்லாம் தெரிகிறது. ஆயினும் ஒரு கேள்வி கேட்கிறேன். ஊராமல், பறக்காமல், நடக்காமல், நீந்தாமல் இருக்கும் பிராணிகளை நீ பார்த்திருக்கிருயா ?”

ம :—“ இல்லை, அப்படியும் ஒரு பிராணி இருக்குமா ? செத்த பிராணிகள்தான் அப்படி இருக்கும்.”

ஆ :—“ செத்த பிராணிகள் அல்ல, அவைகளும் உயிருள்ளவைதான். ஆனல் அவை எங்கே பிறந்தனவோ, அங்கேயே நின்றுவளரும். கிழமானல் இறந்துபோய்விடும்.”

ம:—“ வியப்பாய் இருக்கிறதே. அப்படிப்பட்ட பிராணிகளை நான் பார்த்ததே இல்லை.”

ஆ :—“ நீ எண்ணுமற் சொல்லுகிருய். மரம், செடி முதலியவைகளை நீ பார்த்ததில்லையா ?”

ம :—“ பார்த்திருக்கிறேன்.”

ஆ :—“ அவைகளே அந்தப் பிராணிகள்.”

ம :—“ அவைகளைப் பிராணிகள் என்று சொல்லலாமோ ?”

ஆ :—" ஏன் சொல்லக்கூடாது? மற்றப் பிராணிகளைப்போல் அவை வளர வில்லையா? ஆயினும் அவைகளைப் பிராணிகள் என்று சொல்கிற வழக்கமில்லை; 'ஓரறிவு உயிர்' என்று சொல்வார்கள்.!"

ம :—" அப்படியானால், அவைகளுக்குக் கை கால் முதலிய உறுப்புகள் இல்லையே!"

ஆ :—" அவைகளுக்கும் உறுப்புகள் உண்டு. ஆனால், அவை பிராணிகளின் உறுப்புகளைப் போல் இராமல் வேறுவிதமாய் இருக்கின்றன."

ம :—" அவை எவை?"

ஆ :—" சொல்கிறேன். கருத்தாய்க் கேள். நிற்பதற்குக் கால்கள் வேண்டும்; உணவு உண்ணவும் நீர் குடிக்கவும் வாய்வேண்டும் அல்லவா?"

ம :—" ஆம்."

ஆ :—" மரத்தின் வேர்களே அதற்குக் கால்களாகவும் வாய்களாகவும் இருக்கின்றன."

## 15. மரம்

### (இரண்டாம் பாகம்)

மணி:—"மரத்திற்கு, அதன் வேர், வாயாவது எப்படி?"

ஆசிரியர் :—" மரத்திற்கு எருப் போடுகிறார்கள்; தண்ணீர் வார்க்கிறார்கள் அல்லவா?"

ம :—" ஆம்."

ஆ :—" மரம் வேர்களின் மூலமாகவே அந்த எருவை உண்ணுகின்றது; நீரைக் குடிக்கின்றது.

வேர்களின் மூலமாகவே எருவின் சாரமும் தண்ணீரும் மரத்துக்கு ஏறுகின்றன. படத்தில் உள்ள மரத்தின் வேர்களைப்பார். கிளை கிளையாய்ப் பரவி இருக்கின்றன."



ம :—"ஆம்; அவை ஏன் அப்படி இருக்கின்றன ?"

ஆ :—"மரம் நின்ற இடத்திலேயே நிற்பதல்லவா? ஆதலாற் காற்று முதலிய பகைகள் அதைத் தள்ளினாலும், கீழே விழுந்துவிடாதபடி வேர்கள் உறுதியாய்ப் பரவி ஊன்றியிருக்கின்றன."

ம :—"வேர்கள் எத்தனை என்று சொல்லமுடியாதா ?"

ஆ :—" முடியாது. அதன் வேர்களுக்குக் கணக்கில்லே. மரத்துக்குச் சிறந்த தஞ்சமாய் நடுவே ஒரு பெரிய வேர் இருக்கும். அதற்கு ஆணிவேர் என்று பெயர். அதிலிருந்து நாற்புறத்திலும், பல மெல்லிய வேர்கள் நீண்டு வளர்ந்திருக்கும். அவை களுக்குப் பக்கவேர்கள் என்று பெயர். ஒவ்வொரு பக்கவேரும், சிறிய சிறிய கிளேவேர்களே உடையது. இவைகள் எல்லாம் நிலத்தை ஊடுருவிப் பரந்து செல்வதால், மரம் உறுதியாய் நிற்கிறது. பூமியின் சாரத்தையும் தண்ணீரையும் உறிஞ்சி உட்கொள்வதற்கு இவைகள் வாய்களாகவும் உபயோகப்படுகின்றன."

ம :—" அப்படியா! வேர்கள் இவ்வளவு வேலேகள் செய்யும் என்று நான் நினேக்கவேயில்லே. இவ்வளவு பயனுள்ள வேர்கள் இருக்கும் போது கிளேகளும் இலேகளும் ஏன் ?"

ஆ :—" அவைகளும் பயனுள்ளவையே. பிராணிகள் மூச்சு விடுகின்றன அல்லவா? அப்படியே மரங்களும் மூச்சு விடுகின்றன. சுவாசம் இல்லாமற் பிராணிகள் பிழைத்திருக்க முடியுமா? மரத்தின் இலேகளிலே கண்ணுக்குத் தெரியாத சிறு துவாரங்கள் இருக்கின்றன. அவைகளின் மூலமாக மரம் சுவாசிக்கிறது."

ம :—" ஆச்சரியமாய் இருக்கிறதே."

ஆ :—மரத்தைப்பற்றி இன்னும் வியப்பான காரியங்கள் பல இருக்கின்றன."

ம : — " அப்படியானல், அவைகளேயெல்லாம் சொல்லுங்கள்; கேட்க ஆவலாயிருக்கிறது."

ஆ : — " இப்பொழுது இவ்வளவுபோதும். மற்றவைகள் நீ மேல் வகுப்புகளுக்குப் போகப்

போகத் தெரியும். இப்பொழுது நான் உனக்குச் சொன்னவைகளை யெல்லாம் மறந்துவிடாதே. நினைவில் வைத்துக்கொள்."

அருஞ்சொல்:—பகைகள், தஞ்சம்.

1. ஆணிவேர் என்பதெது?
2. கிளைவேர்கள் எவை?
3. இலைகளால் மரங்களுக்கென்ன பயன் உண்டு?

---

# 16. போதனைத் தோட்டம்

1. பிள்ளைகளே, போதனையிலுள்ள அழகிய தோட்டத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அந்தத் தோட்டம், உலகத்திலே உள்ள மிகச்சிறந்த தோட்டங்களில் ஒன்றாகும். அடுத்த பக்கத்தில் உள்ள படத்தைப்பாருங்கள். இது, அந்தத் தோட்டத்தின் ஒரு வாயிலைக்காட்டும் படம்.

2. அந்தத் தோட்டத்திலே, உலகத்திலுள்ள பலவகையான மரங்கள், கொடிகள், செடிகள், பூண்டுகள் உண்டு. அதன் வாயில் வழியே உள்ளுக்குப்போனால், மிக உயர்ந்த தளப்பத்துப் பனைகள், வழியின் இருபக்கத்திலும் வரிசையாய் நிற்பதைக் காணலாம். பல நீண்ட தொங்கு கொடிகள் தொங்கியிருப்பது பார்க்கப்பார்க்க இன்பத்தைத்தரும். மூங்கில்கள் அடர்ந்து வளர்ந்திருப்பது அச்சத்தைத்தரும்.

3. உள்ளே, சுற்றிச்சுற்றி அழகிய சிறு தெருக்கள்; பக்கங்களிலே பலநிறப்பூக்கள்; இடையிடையே நீர் நிலைகள்; அந்த நீர் நிலைகளிலே

போதனைத் தோட்டம்

Photo by John & Co., Ceylon.

பூங்கொடிகள் ஆகிய இவை எல்லாம் பார்க்கப் பார்க்க வியப்பைத்தரும். ஆகா! என்ன அழகு! என்ன ஆனந்தம்.

4. பழங்கள் ஒருபக்கம் தொங்கும்; காய்கள் ஒருபக்கம் பச்சை இலைகளோடு கலந்து தோன்றும்; சிவப்பு, வெண்மை நிறமான இலையுள்ள மரங்கள், இடையிடையே காணப்படும். இன்னும் எத்தனை விநோதங்கள். நேரிலே பார்த்தால் மட்டுமே தெரியும். இந்தத் தோட்டத்தைச்சுற்றி ஒருபெரிய ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது. அதன் பெயர் மகாவலி கங்கை.

5. பிள்ளைகளே! விடுதலை நாட்களிலே, பல ஆசிரியரும் மாணவரும் சென்று இந்தத் தோட்டத்தைப் பார்க்கிறார்கள்; மரம், செடி, கொடிகளைப் பற்றிப் படித்துக்கொள்கிறார்கள். நீங்கள், இது வரையிற் பாராமலிருந்தால் உங்கள் ஆசிரியரோடு சென்று பார்த்து மகிழுங்கள்.

திரு. மு. ந.

## 17. கொக்கும் நரியும்

1. ஒரு கொக்கும் ஒரு நரியும் ஒருநாள் ஒன்றையொன்று சந்தித்தன. நரி மிகவும் தந்திரமுள்ளது. அது தன்னுடைய தந்திரத்தைக் கொக்கினிடங்காட்டி, அதை ஏமாற்ற நினைத்தது.

2. அதற்காக அது கொக்கைப் பார்த்து "நண்பரே! உம்மைக்கண்டு பல நாட்கள் ஆயின. இப்பொழுது கண்டது மிகவும் ஆனந்தமாயிற்று. என் வீட்டுக்கு வாரும். உமக்கு விருந்து செய்ய விரும்புகிறேன்" என்றது.



3. கொக்கு! நல்லது என்று சம்மதித்து நரியின் வீட்டுக்கு விருந்துண்ணப் போயிற்று. நரி ஒரு தட்டிற் குழம்பு ஊற்றிக்கொண்டு வந்து கொக்கினிடம் வைத்து, "உண்ணும்" என்றது.

4. கொக்கின் மூக்கைப் பாருங்கள். எவ்வளவு நீளமாய் இருக்கிறது. அதுதான் அதற்கு வாயும் மூக்குமாக இருக்கிறது. அதனை அலகு என்று சொல்வார்கள். கொக்குத் தன் அலகினாலே தட்டில் உள்ள குழம்பை எப்படிச்சாப்பிடும்? அது ஏமாந்து போய்ப் பேசாமல் நின்றது.

5. நரி தான்மட்டும் தட்டிற் கொண்டுவந்த குழம்பை நக்கிவிட்டது. பிறகு அது கொக்கைப் பார்த்து "நண்பரே குழம்பு எப்படி இருக்கிறது? வயிறு நிறைய உண்டீரோ?" என்றது. "குழம்பு நன்றாயிருக்கிறது. எனக்கு மனமும் வயிறும் மிகவும் நிறைவாயின. நாளைக்கு நீர் என் வீட்டிற்கு விருந்துண்ண வரவேண்டும்" என்றது கொக்கு. நரி அதற்கு, "நல்லது" என்று உடன்பட்டது. பின்பு கொக்குத் தன் வீட்டுக்குப் போய்விட்டது.



6. மறுநாள் நரி கொக்கின் வீட்டுக்குப் போயிற்று. நரி தன்னை ஏமாற்றியதற்கு நிகராகத் தான் நரியை ஏமாற்றவேண்டும் என்பது கொக்கின் எண்ணம். ஆதலால், அது வாய் குறுகிய ஒரு சாடியிற் சில அப்பத் துண்டுகளைப்போட்டு நரியிடம் வைத்தது.

7. அந்த வாய் குறுகிய சாடியில் இருப்பதை எடுத்துண்ண நரியால் முடியுமா? அது சாடியை எட்டி எட்டிப் பார்த்துவிட்டு ஏமாந்திருந்தது. கொக்குத் தன் நீண்ட அலகை அந்தச் சாடிக்குள் விட்டு அப்பத்துண்டுகளை எடுத்தெடுத்துத் தின்றது. கடைசியில் அது நரியைப்பார்த்து "நண்பரே! என்வீட்டு அப்பம் உமது வீட்டுக் குழம்பு போல இருக்கிறதா?" என்றது.

8. நரி வெட்கி ஒன்றும் பேசாமல் இருந்தது. நாம் பிறரை ஏமாற்றினால் மற்றவர் நம்மை ஏமாற்ற மாட்டாரா?

அருஞ்சொல்:—விருந்து, தந்திரம்.

1. கொக்கு தட்டிலுள்ள குழம்பை யுண்ணமுடியாமல் ஏன் தவித்தது ?

2. நரியின் தந்திரத்துக்கு நிகராகக் கொக்குச்செய்த தந்திரமென்ன ?

## 18. குறத்தியும் சிறுவரும்

### (வார்த்தையாடல்)

"பச்சைமலை பவளமலை" என்பதுபோன்றது.



குறத்தி: குறத்தி வந்தேன் குறத்தி வந்தேன்
குற முரைப்பேன் கேளீர்
குறித்தவெல்லாம் குறித்தபடி
உரைத்திடுவேன் பாரீர்.

சிறுவர்: கறுத்த உடல் வெளுத்த நகைக்
குறத்தியிரே வாரீர்
சிறுத்த இடைக் கறுத்த
உடைச் சிறுக்கிநீரெவ் வூரீர்.

குறத்தி: புதிய தண்ணீர் அருவி வரும்
பொதிய மெங்கள் நாடு
புலவ ரெல்லாம் புகழ்ந்துரைக்கும்
நிதி நிறைந்த நாடு.

சிறுவர்: நிதிய மென்றீர் என்ன நிதி
நிறைந்த தங்கே அம்மே
அதிதயவாய் உரைசெயும் யாம்
அறிய வேண்டும் அம்மே.

குறத்தி: மணங் கமழுஞ் சந்தனங்கள்
வளர்வதெங்கள் நாடு
மதயானைக் கொம்புபல
மலிவதெங்கள் நாடு.

சிறுவர்: உங்கணவன் தொழிலென்னே
உங்கள் தொழில் என்னே
எங்களுக்குத் தெரியா நீர்
இசைக்க வேண்டும் அன்னே.

குறத்தி: என்கணவன் பாம்பாட்டி
இனியநெல்லும் விளைப்பான்
யான் முறங்கள் முடைந்திடுவேன்
எழிற் குறமும் உரைப்பேன்.

சிறுவர்: நீங்க ளுண்ணும் உணவெவையோ
நெடிய கூந்தல் உடையீர்
நாங்களவை அறிந்திடவே
நயந்து சற்றே யுரையீர்.

குறத்தி: பழங்கள் தின்போம் மலையரிசி
பறவைகளும் உண்போம்
கிழங்கு தின்போம் மான்மரைதேன்
கீரைகளும் உண்போம்.

சிறுவர் : புதினம் அம்மே புதினம் அம்மே
போதும் போதும் அம்மே,
இது புதினம் துதி புகன்ருேம்
ஏகிவாரும் அம்மே.

திரு. மு. ந.

அருஞ்சொல்.—குறித்தது, வெளுத்த நகை, சிறுக்கி, நிதியம், மதயானை, மலிதல், தெரியா, இசைக்கவேண்டும், விளைப்பான், விளைத்தல், முறம், முடைதல், எழில், குறம், நெடிய.

1. குறம் சொல்வதென்ருல் என்ன ?
2. குறவர்களின் தொழிலென்ன ?
3. அவர்கள் உணவென்ன ?

## 19. மூட ஆமை

1. ஒரு தாமரைக்குளத்தில் இரண்டு அன்னப்பறவைகள் வாழ்ந்துவந்தன. அவைகள் சில சமயம் தாமரையிலையின்மேற் படுத்திருக்கும். சில சமயம் தண்ணீரில் நீந்தி விளையாடும். விரும்பியபோது தாமரைப்பூவின் மெல்லிய இதழ்களைப் பறித்துத் தின்னும். இப்படிப்பல நாள் அவைகள் இன்பமாய் வாழ்ந்துவந்தன.

2. அந்தக்குளத்தில் இருந்த ஆமை ஒன்று, அந்த அன்னப்பறவைகள் விளையாடுவதை ஒவ்வொரு நாளும் பார்த்துவந்தது; வெள்ளை வெளேல் என்றிருக்கும் அந்தப் பறவைகளின் அழகையும் கவனித்தது; எப்படியாவது அவைகளோடு நட்புச் செய்துகொள்ளவேண்டும் என்று விரும்பியது.

3. ஒரு நாள் ஆமை அந்தப் பறவைகளிடம் தன் கருத்தைச் சொல்லியது. பறவைகள் அதன் விருப்பப்படியே அதனைத் தங்கள் நண்பனாக ஏற்றுக்கொண்டன. அன்றுமுதல் ஆமையும் அன்னப்பறவைகளும் மிகவும் அன்பாயிருந்தன. நாளாக நாளாக அவைகளின் அன்பு பெருகிக் கொண்டே வந்தது.

4. அப்பொழுது மழைக்காலம்; அந்தத் தாமரைக் குளத்திலே தண்ணீர் நிறைந்திருந்தது. கோடைக்காலம் வந்தபோது தண்ணீர் வற்றத் தொடங்கியது. சிறிது சிறிதாகக் குளத்துத் தண்ணீர் பாதிக்குமேல் வற்றிவிட்டது. ஆகையால் அன்னப்பறவைகள் அவ்விடத்தைவிட்டு வேறிடத்துக்குப் போக எண்ணங்கொண்டன.

5. ஆனால், நண்பனாகிய ஆமையை விட்டுப் பிரிய, அவைகளுக்கு மனம் வரவில்லை. இதற்கு என்ன செய்யலாம் என்று அவைகள் வருத்தப் பட்டுக்கொண்டு இருந்தன. அப்பொழுது அவைகளுக்கு ஒரு நல்லெண்ணந் தோன்றியது.

6. உடனே ஆமையை அழைத்து, "நண்பா, இந்தக் குளத்தில் நீர் வற்றிக்கொண்டுபோவதால் நாங்கள் வேறிடத்துக்குப் போக விரும்புகிறோம். உன்னை விட்டுப் போக மனமில்லை. உனக்கோ பறக்கச் சிறகில்லை, வேகமாக நடக்கக் கூடிய காலும் இல்லை. ஆனால் நாங்கள் சொல்கிறபடி செய்வாயானால் எங்களோடு வரக்கூடும்" என்றன.

7. ஆமை, "எதுவானாலுஞ் சொல்லுங்கள். அப்படியே செய்கிறேன். உங்களை விட்டு நான் இங்கு இருக்கமாட்டேன்" என்றது. "நீ ஒரு



கொம்பை வாயிற் கௌவிக்கொள். அதன் இரண்டு முனைகளையும் நாங்கள் கௌவிக்கொண்டு பறந்து போகிறோம். போகும் வழியில் வாயைத் திறந்து விடாதே. திறந்தால் வீழ்ந்து இறந்து விடுவாய்," என்று அன்னங்கள் சொல்லின. ஆமை அப்படியேசெய்வதாக இணங்கி ஒரு கொம்பை வாயிற் கௌவிக்கொண்டது.

8. கொம்பின் இரண்டு முனைகளையும் அன்னங்கள் பற்றிக்கொண்டு பறந்துபோயின. இடைவழியில் மனிதர் சிலர், பறவைகள் ஆமையைக் கொண்டுபோவதைக் கண்டு வியந்து, "இதோ ஒரு புதினம் பாருங்கள்! புதினம் பாருங்கள்! என்று கூவினார்கள். "மனிதர் ஏன் இப்படிக் கூச்சல் இடுகிறார்கள் ?" என்று கேட்க நினைத்து, அந்த மூட ஆமை, வாயைத் திறந்தது. அந்தோ! உடனே கீழே விழுந்து நொருங்கி இறந்து விட்டது.

அருஞ்சோல் :—வெள்ளை வெளேலென்றிருத்தல், நண்பன், நட்பு, கொம்பு, நொருங்குதல்.

1. அன்னங்கள் தன் நண்பனைக் காப்பாற்ற என்ன சூழ்ச்சி செய்தன ?

2. ஆமையின் மூடத்தன மென்ன ?

## 20. நமது உடம்பு

1. நாம் வீட்டில் வாழ்வதுபோல நம் உயிர் நமது உடம்பில் வாழ்கிறது. வீட்டிலே, கூரை, பலகணி, தூண் முதலிய பல உறுப்புகள் இருக்கின்றன அல்லவா ! அப்படியே, நமது உடம்பிலும் பல உறுப்புகள் இருக்கின்றன.

2. நமது உடம்பின் உறுப்புகளை அவயவங்கள் என்றுஞ் சொல்வார்கள். எல்லா உறுப்புகளுக்கும் மேலேயிருப்பது தலை. அது மற்ற உறுப்புகளை விட மிகவுஞ் சிறந்தது. மிகவும் வேண்டிய உறுப்புகள் எல்லாம், தலையிலேதான் இருக்கின்றன.



3. தலையில் உள்ள உறுப்புகளில் மிகவுஞ் சிறந்தது கண். நாம் கண்களினுற் பார்க்கிறேம். காதுகளினுற் கேட்கிறேம். மூக்கினுற் சுவாசிக்கிறேம்; வாசனையை உணருகிறேம். வாயினுல் உண்ணுகிறேம்; பேசுகிறேம்.

4. தலையை அப்படியும் இப்படியும் திருப்புவதற்கு வாய்ப்பாகக் கழுத்து அமைந்திருக்கிறது. கழுத்துக்குக் கீழே இடுப்புவரையில் உள்ள பாகம், மற்றப் பாகங்களைவிடப் பெரியது. அதிலே தோள், மார்பு, வயிறு, முதுகு ஆகிய இவைகள் இருக்கின்றன.

5. இரண்டு பக்கத்திலும் இரண்டு கைகளும் இருக்கின்றன. கைகளால் நாம் பல வேலைகளையும் செய்கிறேம். கைகளை உயர்த்தலாம், நீட்டலாம், மடக்கலாம், கைகளினுல் மற்ற உறுப்புகளை யெல்லாம் தொடலாம். இரண்டு வேலைக்காரர்கள் போலக் கைகள் நமக்கு மிகவும் உதவி செய்கின்றன.

6. இடுப்புக்குக் கீழே கால்கள் இருக்கின்றன. கால்கள் நமது உடம்பைத் தாங்கிக்கொண் டிருக் கின்றன. கால்களின் மேற்பாகத்துக்குத் தொடை கள் என்று பெயர். அடிப்பாகத்துக்குப் பாதங் கள் என்று பெயர். கால்கள் இல்லாவிட்டால் நம்மால் ஓடவும், நடக்கவும் முடியாது; இருந்த இடத்திலேயே இருக்கவேண்டும்.

7. கைகளின் நுனியிலும் கால்களின் நுனி யிலும் விரல்கள் இருக்கின்றன. நமக்குக் கை விரல்கள், ஒவ்வொரு கைக்கும் ஐவைந்தாகப் பத்து உள்ளன. கால்விரல்களும் அப்படியே பத்து உள்ளன. கையில் விரல்கள் இல்லாவிட்டால், ஒன்றை அள்ளவாவது, கிள்ளவாவது, பொறுக்க வாவது, பிடிக்கவாவது, எழுதவாவது முடியுமா ?

8. பிள்ளைகளே, பாருங்கள். நமது உடம் பில் உள்ள எல்லா உறுப்புகளும் பயன் உடையன வாகவே இருக்கின்றன. இவ்வளவு அருமையான உடம்பைக் கடவுள் தந்தருளினர். அவரிடத்தில் நாம் எப்பொழுதும் நன்றி உள்ளவர்களாய் இருக்கவேண்டும்.

அருஞ்சொல் :—பலகணி, ஐவைந்து, அள்ளல், கிள்ளல், பொறுக்கல்.

| | | | | |
|---|---|---|---|---|
| ஐந்து | + | ஐந்து | = | ஐவைந்து |
| ஒன்று | + | ஒன்று | = | ஒவ்வொன்று |
| இரண்டு | + | இரண்டு | = | இவ்விரண்டு |
| மூன்று | + | மூன்று | = | மும்மூன்று |
| நான்கு | + | நான்கு | = | நந்நான்கு |
| ஆறு | + | ஆறு | = | அவ்வாறு |
| ஏழு | + | ஏழு | = | எவ்வேழு |
| எட்டு | + | எட்டு | = | எவ்வெட்டு |
| பத்து | + | பத்து | = | பப்பத்து |

# 21. நீர்

1. நீர் இல்லாமல் நாம் வாழ முடியுமா? வேறு எந்தப் பிராணியாவது பிழைத்திருக்குமா? புல், செடி முதலியவைகள்கூட நீர் இல்லாவிட்டாற் பட்டுப்போகும் அல்லவா? ஆதலால் நீர், ஒரு சிறந்த பொருள். நாம் அதைப்பற்றி நன்ருய்த் தெரிந்துகொள்ளவேண்டும்.

2. நீர், நமக்கு உண்டாகும் தாகத்தைத் தணிக்கிறது. வெய்யிலால் உண்டாகும் வெப்பத்தைக் குறைத்துக் குளிர்ச்சிசெய்கிறது. நாம் உடம்பையும், துணி, பாத்திரம் முதலிய பல பொருள்களையும் சுத்தப்படுத்த உதவுகிறது.

3. நாம் குடிக்கிற நீர் இரத்தத்துடன் கலந்து நமது உடம்பு முழுவதும் பரவுகிறது. நமது உடம்பின் பெரும்பாகம் நீர்மயமாக இருக்கிறது. ஆகையால், நாம் குடிக்கிற நீர் அழுக்காயிருந்தால் நமது இரத்தமும் அழுக்காய்விடும். இரத்தம் அழுக்கடைந்தால் உடம்பிற் பலவித நோய்கள் உண்டாகும்.

4. நோய்க்கு இடங் கொடாமல், நாம் நல்ல நீரையே பருகவேண்டும். தூய்மையான நீருக்கு நிறமும் சுவையும் இல்லை. மழைநீர், பூமியில் விழுவதற்கு முன்னே தூய்மையாய் இருக்கும். பிறகுதான் பூமியில் உள்ள அழுக்கான பொருள்களோடு சேர்ந்து அழுக்காகிறது.

5. அழுக்கான நீரிற் பலவிதமான புழுக்கள் நிறைந்திருக்கும். பூதக்கண்ணடியை வைத்துப் பார்த்தால், ஒரு துளி நீர், மிகவும் பெரிதாய்க் காணப்படும். அப்போது அதில் உள்ள புழுக்கள்

எல்லாம் நன்ருய்த்தெரியும். பக்கத்தில் உள்ள படத்தைப் பாருங்கள். இதில் எத்தனை புழுக்கள் நிறைந்திருக்கின்றன. ஒரு துளி நீரைப் பூதக் கண்ணுடியாற் பார்த்தால், இப்படித் தோன்றும்.



6. ஒரு துளி நீரில் இவ்வளவு புழுக்கள் இருக்குமானுல், நாம் குடிக்கிற நீரில் எவ்வளவு புழுக்கள் இருக்கும்? அவைகள் இரத்தத்தோடு கலந்தால் இரத்தம் அழுக்கடைந்து நோய் உண்டாவது ஆச்சரியமா? ஆகையால், நாம் அசுத்தமான நீரை ஒருபோதும் குடிக்கக்கூடாது.

7. நீரைக் காய்ச்சினுல் அதில் உள்ள புழுக்கள் செத்துப்போகும். பிறகு, அதை வடிகட்டிவிட்டால் அது தூய்மை அடைந்துவிடும். ஆகையால், எந்த நீரையும் காய்ச்சி வடிகட்டிப் பருகவேண்டும்.

8. ஊற்றில் ஊறுகின்ற நீர், தூய்மையாய் இருக்கும். ஆனுல், அதற்குப் பக்கத்தில் மரங்கள் இருந்தால், அவைகளின் இலைகள் நீரில் விழுந்து அழுகும். அதனுல் நீர் அழுக்கடையும். ஆகையால் துரவு, கிணறு முதலியவற்றிற்குப் பக்கத்தில் மரங்களை வளர விடக்கூடாது. துரவு முதலியன உள்ள இடத்தையும் தூய்மையாய் வைத்திருக்கவேண்டும்.

9. சிலர், கிணறு, குளம் முதலிய நீர் நிலைகளுக்குப் பக்கத்தில் மலம் கழிக்கிறார்கள். ஆடு மாட்டைக் கட்டுகிறார்கள். பக்கத்தில் விழும் மழைநீர் முதலியவற்றோடு, இந்த அழுக்குகள் சேர்ந்து பூமிக்குள் ஊறிச்சென்று, கிணறு, குளம் முதலியவைகளிலுள்ள நீரை அழுக்காக்கி விடுகிறது.

அருஞ்சொல் :—பூதக்கண்ணாடி, வடிகட்டல், பருகல், துரவு.

1. நீரால் நமக்குண்டாகும் பயன்களெவை ?
2. நீர் இல்லாவிட்டால் உண்டாகும் தீங்குகளெவை ?

## 22. பூனையும் புலியும்



1. ஒரு பூனை, பலநாள் ஒரு வீட்டில் வாழ்ந்தது. அந்த வீட்டில் அகப்படும் எலிகளையும், வீட்டில் உள்ளவர்கள் இடும் உணவையும் அது தின்று வளர்ந்து வந்தது. 'நாட்டில் இருப்பது போலக் காட்டிலும் எலிகள் இருக்கும் என்று சொல்கிறார்களே; நான் ஒரு காட்டைப்போய்ப் பார்த்துவரவேண்டும்,' என்று அது எண்ணியது.

2. அப்படியே, ஒரு நாட் பிற்பகல் அது நாட்டைவிட்டுக் காட்டுக்குப் போயிற்று. காட்டில் எலிவளை எங்கே இருக்கிறது என்று அங்கும் இங்கும் சுற்றிப் பார்த்தது.

3. அப்போது அது, ஒரு பெரிய விலங்கு தன்னை நோக்கி வருவதைக் கண்டது. அந்த விலங்கு உருவத்தில் இந்தப் பூனையைப்போலவே இருந்தது. அளவில் மட்டும் பெரியதாய் இருந்தது. அதன் நீளம் ஏறக்குறைய ஐந்து அல்லது ஆறடி இருக்கும். அதன் முகம் கொடியதாய்க் காணப்பட்டது; கண்கள் சிவந்து அனல்போல் இருந்தன. ஆனால் உடம்பு அழகாய் இருந்தது. அதன் நிறம் பழுப்பாய் இருந்தது. அதில் வளை வாய்க் கோடு கிழித்தாற்போலக் கறுப்புவரிகள் வரிசையாய் இருந்தன.



4. பூனை அதைக் காணவும் அஞ்சியது. ஆயினும் ஓடிப்போய்விடவில்லை. ‘ இதைப் பார்த்தால் என் இனத்தைச் சேர்ந்ததுபோல் இருக்

கிறது. புலி என்று சொல்கிறார்களே! அது இது தான் போல் இருக்கிறது; கிட்ட வரட்டும்; தந்திரமாய் நட்புச் செய்துகொள்ளலாம்; பெரியவர்கள் நட்புச் சமயத்துக்கு உதவும்' என்று எண்ணி அது துணிவாய் நின்றது.

5. அந்தப் பெரிய விலங்கு பூனையண்டை வந்து நின்று அதை உற்றுப் பார்த்தது. இன்னும் சற்று நேரத்திற் பூனையின்மீது பாய்ந்து அதைக் கொன்றுவிடும்போலத் தோன்றியது. பூனை அதற்கு வணக்கஞ்செய்து "உங்களைத்தான் தேடிவந்தேன்" என்றது.

6. பெரிய விலங்கு வியப்படைந்து, "நீ யார்?" என்று கேட்டது. பூனை மிகவும் வணக்கமாய், "நான் இந்தக் காட்டுக்கு அடுத்த நாட்டில் வாழ்கிறேன். ஆயினும் நான் உங்கள் இனத்தவரில் ஒருவனே" என்றது. வந்த விலங்கு, அதை உற்றுப் பார்த்து, "நீ என் இனத்தவனா? உன்னைப் பார்த்தால் மிகவுஞ் சிறிய பிராணியாய் இருக்கிறாய். நீ எனக்கு உறவினனாவது எப்படி? இது புதினமாய் இருக்கிறதே!" என்றது.

7. பூனை அதை நோக்கி, "உங்கள் பெயர் தானே புலி?" என்று கேட்டது; புலி "ஆம்" என்றது. பூனை மிகவும் மகிழ்ச்சிகொண்டதுபோலத் தலை நிமிர்ந்து, "நான் தேடி வந்தது உங்களைத் தான். அடியேன் உங்கள் இனத்தவனே. என்னைப் பூனை என்று சொல்வார்கள். நீங்கள் காட்டில் வாழ்ந்து வருகிறீர்கள். நான் நாட்டில் வசித்துவருகிறேன். அதனால் நம்முடைய உறவு கொஞ்சம் விட்டுப் போய்விட்டது. வேறு ஒன்றுமில்லை" என்றது.

# 23. பூனையும் புலியும்

(இரண்டாம் பாகம்)

1. புலி அதன் பேச்சில் ஐயங்கொண்டு, "என்னதான் உறவு விட்டுப்போனாலும் உனக்கும், எனக்கும் இவ்வளவு வேற்றுமையா ஏற்பட்டு விடும்? நீ ஆட்டுக்குட்டி அவ்வளவுகூட இல்லையே!" என்றது. இதைக் கேட்டதும் பூனையின் துணிவு கொஞ்சம் குறைந்தது. அது புலியைப் பார்த்து "உடம்பின் அளவைப் பார்த்து ஐயப்படக்கூடாது. என் உருவத்தைப் பாருங்கள், உங்களைப்போல் எனக்கும் முகத்தில் நீண்ட வீசை இருக்கிறது. முகத்தோற்றமும் நமக்கு ஒத்திருக்கிறதல்லவா?" என்றது.

2. "உண்மைதான், அவ்வளவு போதுமா? என் கண்களைப் பார், மஞ்சளாய் இருக்கின்றன.



இரவிலும் எனக்குக் கண் நன்றாய்த் தெரியும். என் நாக்கைப் பார், அரத்தைப் போல் இருக்கிறது. என் பற்கள் மிகவுங் கூர்மையானவை. என் கால் நகங்களைப் பார், கூராய் நீண்டு வளைந்திருக்கின்

றன. இவைகளை நான்வேண்டும்போது வெளியே நீட்டவும் உள்ளே மடக்கவும் கூடும். இவைகளில் ஏதாவது உனக்கு உண்டா ?" என்று, புலி பூனையைக் கேட்டது.

3. அதற்குப் பூனை "அவை எல்லாம் எனக்கும் உண்டு. எனக்குப் பகலைவிட இரவிலே கண் நன்றாய்த் தெரியும். என் நாக்கு அரத்தைப் போலத்தான் இருக்கிறது. பற்கள் கூராய் இருக்கின்றன. கால்நகங்களைப் பாருங்கள். கூராய் வளைந்திருக்கின்றன. இவைகளை நான் வேண்டும் போது உள்ளுக்கு இழுக்கவும் வெளியே நீட்டவும் கூடும்" என்றது.

4. புலி "உனக்குத் தீன் என்ன ?" என்று கேட்டது. பூனை "எலி முதலியவைகள்" என்றது. "சீ, ஏழைப் பிராணியே, நாங்கள் ஆடு, மாடு முதலியவற்றையே தின்போம்; மனிதரையும் தின்பதுண்டு; கிடக்கட்டும்; உனக்கு நீந்தத் தெரியுமா ?" என்று புலி கொஞ்சம் சினத்தோடு கேட்டது.

5. பூனை "இனி நான் இங்கு இருந்தால் ஆபத்து நேரிடும். மெதுவாய் ஓடித் தப்பித்துக் கொள்ளவேண்டும்" என்று எண்ணியது. அப்போது அதற்கு ஒரு சூழ்ச்சி தோன்றியது. அது புலியைப் பார்த்து, "நீரில் நீந்த நான் பழகவில்லை. அது என்னால் முடியாது. அதற்கு நிகராக வேறொரு வித்தை கற்றிருக்கிறேன், பாருங்கள்" என்று சொல்லிப் பக்கத்தில் இருந்த ஒரு மரத்தின்மேல் ஏறிக்கொண்டது.

6. புலிக்கு மரம் ஏறத்தெரியாது. ஆதலால் அது சற்றுநேரம் நின்று பார்த்துவிட்டுப் போய்

விட்டது. பிறகு பூனை, மரத்தை விட்டிறங்கிக் காட்டைவிட்டு நாட்டுக்கு வந்துவிட்டது.

அருஞ்சொல்:—அனல், உற்றுப் பார்த்தல், உறவினன், துணிவு, ஐயப்படல், சூழ்ச்சி.

1. காடென்றாலென்ன? நாடென்றாலென்ன?

2. புலியும் பூனையும் ஒன்றுக்கொன்றினமானவை என்பதெவற்றால்?

---

# 24. புறாவும் எறும்பும்

1. ஓர் ஊரிலே பெரிய குளம் ஒன்று இருந்தது. அதன் கரையைச் சுற்றிப் பல மரங்கள் வளர்ந்திருந்தன. அந்த மரங்களில் ஒன்றின் கிளையில், ஒரு புறா தன் குஞ்சுடன் அமர்ந்து மேலும் கீழும் பார்த்துக்கொண்டிருந்தது.

2. அப்போது ஓர் எறும்பு குளத்தின் ஓரத்தில் நீரில் விழுந்து தவித்துக்கொண்டிருந்தது. வருத்தப்பட்டு நீந்தி மெதுவாய்க் கரை சேர்ந்துவிடலாம் என்று, அது தன்னால் ஆனமட்டும் முயன்றது. முயன்றும் கரைசேர முடியவில்லை.

3. பாவம்! அது ஒரு எளிய பிராணி. அதனால் என்ன செய்யமுடியும்! 'எனக்கு வயது இவ்வளவு தானே? இன்னும் சிறிது நேரத்தில் என்னுடைய உயிர் போய்விடப்போகிறது. தவிக்கும் இந்த நேரத்தில் எனக்கு யாராவது உதவி செய்யமாட்டாரா?' என்று, அது தனக்குள் எண்ணி, வருந்தித் தத்தளித்தது.

4. மரத்தின்மேல் இருந்த புறா அது படும் பாட்டைப் பார்த்தது. அதற்கு மிகவும் இரக்கம்



உண்டாயிற்று. 'ஐயோ பாவம்! ஓர் ஏழை எறும்பு இறந்து போகும்போல் இருக்கிறதே. இதை நான் எப்படியாவது காப்பாற்றவேண்டும்' என்று அது எண்ணியது.

5. ஒரு புறாவுக்கு உள்ள இரக்கத்தைப் பார்த்தீர்களா ? உடனே, அது தன் மூக்கினுல் ஒரு இலையைக் கிள்ளி அந்த எறும்புக்கு எதிரே போட்டது. மேலே இருந்து ஓர் இலை தன் எதிரில் நீரில் விழவும், எறும்பு நிமிர்ந்து பார்த்தது.

6. புறு அதைப் பார்த்து "நீரிலே தத்தளிக்கும் எறும்பே! நீ மெதுவாய் அந்த இலையின் மேல் ஏறிக்கொள். கொஞ்சநேரத்தில் இலை கரையில் ஒதுங்கிவிடும். அப்புறம் நீ எளிதாய்ப் பிழைத்துவிடலாம்," என்றது. எறும்பு அப்படியே அந்த இலைமேல் ஏறிக்கொண்டது.

7. அந்த இலை தெப்பம்போல் மிதந்து வந்து கொஞ்சநேரத்திலே கரையில் ஒதுங்கிவிட்டது. உடனே எறும்பு உவகையோடு கரைசேர்ந்தது. பிறகு அது புறுவைப் பார்த்து "அன்புள்ள புறுவே! நீ ஆபத்துக் காலத்தில் எனக்கு நல்ல உதவி செய்தாய். உன்னால் நான் உயிர் பிழைத்தேன். உன்னை என்றும் மறவேன்" என்றது.

8. அதே நேரத்தில், அங்கே ஒரு வேடன் வந்தான். அவன் மரத்தின்மேல் அமர்ந்திருந்த புறுவைப் பார்த்துவிட்டான். உடனே அதைக் கொல்ல எண்ணங்கொண்டு, அவன் மரத்தடியில் நின்று குறிவைத்து எய்யப் போனான்.

9. புறு வேடன் நிற்பதைப் பார்க்கவில்லை. ஆனால், அந்த எறும்பு வேடனைக் கண்டுவிட்டது. 'என் உயிரைக் காப்பாற்றிய புறுவை இவன் கொல்ல முயல்கிறான். எப்படியாவது இந்தத் தீங்கை நான் தடுக்கவேண்டும்,' என்று எண்ணி, வேடன் காலிலே திடீரென்று கடித்தது.

10. வேடன் காலை உதறினான். அந்த ஓசையைக்கேட்டு அருகே புதரிலிருந்த ஒரு பாம்பு வெளிப்பட்டு வந்து வேடன் காலிலே விரைந்து கடித்தது. அவன் 'ஐயோ' என்று அலறிக் கொண்டு கீழே விழுந்தான். அந்தக் குரலைக்

கேட்டவுடன் புரு தன் குஞ்சுடன் பறந்து போய் விட்டது. அவன் எய்த அம்பு குறிதவறி அந்தப் புருவைக் கொல்லவந்த ஒரு பருந்தின்மேற் பட்டது. பிள்ளைகளே! ஓர் எறும்பு கூடச் செய்த நன்றியை மறவாமல் நிகர் நன்றி செய்து புருவைக் காப்பாற்றியது. நீங்களும் ஒருவர் செய்த நன்றியை மறவாதிருங்கள்.

அருஞ்சொல்:—உவகை, தீங்கு.

1. நிகர் நன்றி யென்றாலென்ன? இந்தப் பாடத்திற் சொல்லப்படும் நிகர் நன்றி யென்ன?

---

## 25. உயிர்கள்மேல் இரக்கம்

### ஆனந்தக் களிப்பு.

1. அன்பு மிகுந்திட்ட பிள்ளாய்—உயிர்
அத்தனை யும்நம்மை ஒத்தன கண்டாய்
என்பு சதைகொண்ட தேகம்—அவை
யாவும், கொண் டேபுவி மேவி யுலாவும்—
(அன்பு)

2. ஊர்ந்து திரிபவை கோடி—வானில்
ஓடிப் பறப்பவை யோபல கோடி
நீந்தித் திரிபவை கோடி—இந்த
நிலத்தில் நடப்பவை பற்பல கோடி—(அன்பு)

3. உன்னைப்போ லேயுண வுண்ணும்—அவை
உன்னைப்போ லேகளை வந்தா லுறங்கும்
உன்னைப்போ லேயின்ப துன்பம்—யாவும்
உண்டவை கட்கருள் கொண்டிட வேண்டும்—
(அன்பு)

4. உன்னை ஒருவ ரடித்தால்—கல்லால்
ஓங்கி யெறிந்தா லுதைந்தால் மிதித்தால்
என்ன வருத்த மடைவாய்— அதை
எண்ணி யுயிர்களுக் கேதஞ் செய்யாதே—
(அன்பு)

5. பறவைக ளைப்பிடிக் காதே— அவை
பாடிக்கூ டியாடும் பண்பைக் கெடாதே
பறவைகளின் கூட்டை வீணே—அந்தோ
பாழ்படுத் தாதே பயனில்லைக் காணே—
(அன்பு)

6. வண்டுகள் வண்ணாத்திப் பூச்சி—தும்பி
மாடாடு யாவுக்கும் கேடு சூழாதே
அண்டினரைக்கெடுக் காதே—ஏழை
ஆனோரை வருத்தி அலைவு செய்யாதே—
(அன்பு)



7. யாருக்குந் தீங்குசெய் யாதே—எளியர்
என்றுநீ வாட்டில் இறை பொறுக்காரே
பாருக்குள் ஒற்றுமை வேண்டும்—யாரும்
பயனொடு வாழ நயஞ் செய்ய வேண்டும்—
(அன்பு)

8. அழுக்காறு சற்றுங்கொள் ளாதே—இன்சொல்
அன்போடு பேசமறந்து விடாதே
பழக்கங்கள் நல்லன வேண்டும்—பரன்
பாதத்தை நாளும் பணிந்திட வேண்டும்—
(அன்பு)

திரு. மு. ந.

அருஞ்சொல்:—ஒத்தன, ஏதம், பண்பு, சூழ்தல், சூழாமை, அண்டினர், அலைவு, இறை, அழுக்காறு, இன்சொல்.

1. ஊர்வன, நடப்பன, பறப்பன சில சொல்.

2. மற்ற உயிர்கள் எவ்வெவ்வகையில் நமக்கு ஒப்பானவை ?

3. அருள், அன்பு என்பவை யாவை ?

4. அழுக்காறு கொண்டால் வரும் கேடென்ன ?

## 26. கடவுள்.

இராகம்—தேசிகதோடி ; தாளம்—சாப்பு.

1. பச்சை மரத்திலே யெத்தனை ? வானிற்
பரந்து விளங்கிடுந் தாரகையும்
நிச்சய மாய்க்கடல் மீன்களு மெத்தனை ?
நீதெரிந் தேசொல்லக் கூடியவோ ?

2. நாய்தன்றன் வாலைக் குழைப்பதும், ஊற்றுக்
நன்கடை யாம லிருப்பதுவும் [கண்
காய்வுறு தாமரை மட்கிய பின்தழை
காரண முஞ்சொல்லக் கூடியவோ ?

3. கடவுள் பெருமை விசித்திரமே ; அதைக்
கண்டுரை செய்திட லாவதுவோ ?
உடைய னவனு யுலகத் துயிர்களை
ஊட்டி வளர்ப்பவன் தானலவோ ?

## 27. செய்யுட் பாடம்.

ஆத்திசூடி.

1. அறஞ்செய விரும்பு.
2. ஆறுவது சினம்.
3. இயல்வது கரவேல்.
4. ஈவது விலக்கேல்.
5. ஊக்கமது கைவிடேல்.
6. எண்ணெழுத் திகழேல்.
7. ஏற்ப திகழ்ச்சி.
8. ஐய மிட்டுண்.
9. ஒதுவ தொழியேல்.
10. ஔவியம் பேசேல்.
11. கண்டொன்று சொல்லேல்.
12. ஙப்போல் வளை.
13. சனி நீ ராடு.
14. ஞயம்பட வுரை.
15. இணக்கமறிந் திணங்கு.
16. தந்தைதாய் பேண்.
17. நன்றி மறவேல்.
18. இயல்பலா தனசெயேல்.
19. அரவ மாட்டேல்.
20. வஞ்சகம் பேசேல்.
21. அழகலா தனசெயேல்.
22. இளமையிற் கல்.
23. அறனை மறவேல்.
24. அனந்த லாடேல்.

25. கடிவது மற.
26. கீழ்மை யகற்று.
27. குணமது கைவிடேல்.
28. கூடிப் பிரியேல்.
29. கெடுப்ப தொழி.
30. கேள்வி முயல்.
31. கொள்ளை விரும்பேல்.
32. கோதாட் டொழி.
33. சக்கர நெறிநில்.
34. சான்றோ ரினத்திரு.
35. சீர்மை மறவேல்.
36. சூது விரும்பேல்.
37. செய்வன திருந்தச் செய்.
38. சேரிட மறிந்துசேர்.
39. சோம்பித் திரியேல்.
40. தீவினை யகற்று.
41. தெய்வ மிகழேல்.
42. தேசத்தோ டொத்துவாழ்.
43. நன்மை கடைப்பிடி.
44. நீர் விளையாடேல்.
45. நூல்பல கல்.
46. நேர்பட வொழுகு.
47. நோய்க் கிடங்கொடேல்.
48. பாம்பொடு பழகேல்.
49. மேன்மக்கள் சொற்கேள்.
50. வித்தை விரும்பு.

கொன்றை வேந்தன்.

1. அன்னையும் பிதாவு முன்னறி தெய்வம்.
2. ஆலயந் தொழுவது சாலவு நன்று.
3. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.
4. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
5. எண்ணு மெழுத்துங் கண்ணெனத் தகும்.
6. ஏவா மக்கண் மூவா மருந்து.
7. ஐயம் புகினுஞ் செய்வன செய்.
8. இட்டாதாயின் வெட்டன மற.
9. கீழோ ராயினுந் தாழ வுரை.
10. குற்றம் பார்க்கிற் சுற்ற மில்லை.
11. கூரம்பாயினும் வீரியம் பேசேல்.
12. கெடுவது செய்யின் விடுவது கருமம்.
13. கேட்டி லுறுதி கூட்டு முடைமை.
14. கைப்பொருடன்னின் மெய்ப்பொருள் கல்வி.
15. கோட்செவிக் குறளை காற்றுட னெருப்பு.
16. சான்றோ ரென்கை ஈன்றோர்க் கழகு.
17. சீரைத் தேடி னேரைத் தேடு.
18. சூதும் வாதும் வேதனை செய்யும்.
19. சேமம் புகினும் யாமத் துறங்கு.
20. சோம்ப ரென்பவர் தேம்பித் திரிவர்.
21. தந்தைசொன் மிக்க மந்திரமில்லை.
22. தாயிற் சிறந்தொரு கோயிலு மில்லை.
23. திரைகட லோடியுந் திரவியந் தேடு.
24. தீராக் கோபம் போரா முடியும்.
25. தேடா தழிக்கிற் பாடாமுடியும்.

26. தையு மாசியும் வையகத் துறங்கு.
27. தொழுதூண் சுவையி னுழுதூ ணினிது.
28. நல்லிணக்க மல்ல தல்லற் படுத்தும்.
29. நிற்கக் கற்றல் சொற்றிறம் பாமை.
30. நீரகம் பொருந்திய வூரகத் திரு.
31. நுண்ணிய கருமமு மெண்ணித் துணி.
32. நூன்முறை தெரிந்து சீலத்தொழுகு.
33. நெஞ்சை யொளித்தொரு வஞ்சகமில்லை.
34. நைபவ ரெனினு நொய்ய வுரையேல்.
35. நோன்பென்பதுவே கொன்று தின்னாமை.
36. பாலோ டாயினுங் கால மறிந்துண்.
37. புலையுங் கொலையுங் களவுந் தவிர்.
38. பூரியோர்க் கில்லைச் சீரிய வொழுக்கம்.
39. பையச் சென்றால் வையந் தாங்கும்.
40. பொல்லாங் கென்பவை யெல்லாந் தவிர்.

## தென்னிந்தியா வாசக புத்தகங்கள்.

| | |
|---|---|
| முதற் புத்தகம் | விலை அணு $2\frac{1}{2}$ |
| இரண்டாம் புத்தகம் | ,, ,, 4 |
| மூன்றும் புத்தகம் | ,, ,, 4 |
| நான்காம் புத்தகம் | ,, ,, 6 |
| ஐந்தாம் புத்தகம் | ,, ,, 6 |

இந்தத் தென்னிந்தியா வாசக புத்தகங்கள் பாலர் வகுப்புத் தொடங்கிப் படிப்படியாக மேலே பல வகுப்புகளுக்கும் பாட புத்தகங்களாக புதிதாய் இயற்றப்பட்டுள்ளன. எலிமெண்டரி பாடசாலை பிள்ளைகளைப்பற்றி அதிக அனுபவமுள்ள உபாத்தியாயர்களால் இவைகள் எழுதப்பட்டன. சிறந்த வித்துவான்களால் நன்கு பரிசோதிக்கப்பெற்றன.

துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டன.

---

## தமிழ் இலக்கணங்கள்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| முதற் புத்தகம் (5-ம் வகுப்பிற்கு) ... | 0 | 3 | 0 |
| இரண்டாம் புத்தகம் (6-ம் வகுப்பிற்கு) ... | 0 | 5 | 0 |
| மூன்றும் புத்தகம் (7-ஆம் வகுப்பிற்கு) இது மகாலிங்கையர் இயற்றியது ... | 0 | 8 | 0 |
| நான்காம் புத்தகம் (8-ஆம் வகுப்பிற்கு) இது விசாகப்பெருமாளையர் இயற்றியது ... | 0 | 12 | 0 |
| ஐந்தாம் புத்தகம் (உயர்தர வகுப்புகளுக்கு) இது நன்னூல் ... ... | 2 | 0 | 0 |

---

**உபாத்தியாயர்க்கு:**—அடியிற்கண்ட விஷயத்தைப் பிள்ளைகளுக்குத் தெளிவாய் போதிக்கவேண்டும்.

ஈயால் மனிதனுக்குப் பல கெடுதிகள் உண்டு. அது அழுக்கில் பிறக்கிறது; அழுக்கிலேயே வளர்கிறது. அழுக்கைத் தன் கால் மயிர்களிற் பூசிக்கொண்டு போகிறது.



முதலில் முட்டையாயிருந்து, பிறகு புழுவாய் இருந்து சிலநாளில் இறக்கை முளைக்கப் பெற்று ஈயாய் வெளிப்படுகிறது. ஆபத்துக்கிடமான தொத்து நோய் மலப்புழுக்கள் அதன் கால்களில் தொத்திக் கொள்ளுகின்றன. அவைகளை அது போகுமிடமெல்லாம் பரப்புவதே தொழிலாகக் கொண்டிருக்கிறது. எங்கே ஈயில்லை? ஒதுங்கும் இடங்களில், தொழுவங்களில், இலாயங்களில், எருக்குப்பைகளில், அழுகும் இறைச்சியில், ஊசும் கறிகளில், வாந்திபேதி சீதபேதி நோயாளிகளுடைய மலசலத்தில், கபவாத காசநோயாளிகளுடைய ஈளையில், அவர்கள் படுக்கும் அறைகளில்; எங்குந்தான் அது உல்லாசமாய் உலாவித் திரிகிறது. அதைக் கேட்பாரார்? தடுப்பாரார்? அது தன் கால்களில் தொத்தியுள்ள தொத்துநோய் மூலப்புழுக்களோடு தித்திப்பான பண்டங்களின்மேல் மொய்க்கிறது. அதனால் அதை உண்பவர்கள் அவ்வியாதி கண்டு வருந்துகிறார்கள்.

அது பார்வைக்குச் சிறியதாயினும் பெரிய நோய்களைப் பரப்பி அநேக மரணங்களுக்குக் காரணமாயிருக்கிறது.

வாந்திபேதியைப் பரப்புவதும் அதுதான்; க்ஷயநோயை வளர்ப்பதுவும் அதுதான்; கபவாத சுரம், குடல் சுரம், குஷ்டம் முதலியவைகளைக் கூட்டுவதும் அதுதான்; சீதபேதியும் வயிற்றுக் கழிச்சலும் வாத சுரமும் மற்றுமுள்ள எல்லா நோய்களும் அதனாலேயே உண்டாகின்றன. க்ஷய நோயாளியின் ஈளை, சீதபேதி வாந்திபேதி நோயாளியின் மல மூத்திரங்கள், கபவாத சுரம், பித்தவாத சுர நோயாளியின் வேர்வை மூத்திரங்கள் ஆகிய இவைகளெல்லாம் அதற்கு இனிய உணவாகும். அவைகளின்மேல் அது ஆசையாய் மொய்த்து, சுவைகளை அன்பாய் உண்டு, தன் அங்கமெல்லாம் பூசிக்கொண்டு வந்து நமது உணவின்மேல் தென்பாய் உட்கார்ந்து நமக்குட் செலுத்துகிறது. நம் வீட்டிற் சிறு வாயைத் திறந்துறங்கும் சிசு வாயிலும் அது மொய்த்துத் தீமை விளைக்கிறது.

இக் கொடியோனை அஞ்சி விலகுங்கள். அதி ஜாக்கிரதையாய் விலக்குங்கள். உணவுப் பாத்திரங்களை மூடிவையுங்கள். ஈயானாகிய இவனைத் தீயானென்றெண்ணி மற்றெதன்மேலும் ஏறவொட்டாமல் துரத்துங்கள்.

---

* பூதக்கண்ணாடியின் கீழ் தெரிகிறபடி.

## இயற்கை விளக்க வாசகங்கள்

திவான் பகதூர்

வி. கிருஷ்ணமாச்சாரியார் இயற்றியவை

| | | | | | அணா. |
|---|---|---|---|---|---|
| முதற் | புத்தகம் | முதல் வகுப்பிற்கு | ... | ... | 2 |
| இரண்டாம் | ,, | இரண்டாம் ,, | ... | ... | 3 |
| மூன்றும் | ,, | மூன்றும் ,, | ... | ... | 4 |
| நான்காம் | ,, | நான்காம் ,, | ... | ... | 5 |
| ஐந்தாம் | ,, | ஐந்தாம் ,, | ... | ... | 6 |

---

## சோதனுசாலையின் உதவி வேண்டாத ஆரம்ப அனுபவ விஞ்ஞான சாத்திரம்

ஆக்கியோர்

இலங்கைப் பாடசாலை வித்தியாதரிசினி

டோரா ஹஸ்ஸி அம்மாள்

| | | | | | அணா. |
|---|---|---|---|---|---|
| முதற் | புத்தகம் | முதல் பாரத்திற்கு | ... | ... | 4 |
| இரண்டாம் | ,, | இரண்டாம் ,, | ... | ... | 6 |
| மூன்றும் | ,, | மூன்றும் ,, | ... | அச்சிலிருக்கிறது. | |

---

## இயற்கையின் இயல்புகளை விளக்கும் ஓர் கைந்நூல்

| | | அ. | பை |
|---|---|---|---|
| ஆர். மக்லியோட் அவர்களால் எழுதப்பெற்றது | ... | 3 | 3 |


---

NATURE READER THIRD BOOK, TAMIL. 4 As.